NEW MASTER INSTITUTE
B.M.G. Lane, Jaffna;
89 A/L Day Classes
துரித மீட்டல் வகுப்புகள் நடைபெறுகின்றன
7.30 — Zoology
8.30 — Chemistry
9.30 — Physics
10.30 — Chemistry
11.30 — Botany
12.30 — Zoology
8.00—12.30 —
Pure & Applied Maths

பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ 2/50

NEW MASTER INSTITUTE
B. M. C Lane, Jaffna;
89 A/L
DAY
CHEMISTRY CLASS
(Mon — FRI)
ஆசிரியர்:
✶ திரு. பாபு ✶
ஆரம்பம்: 01-09.89
வெள்ளி காலை 10-30
(ஆரம்ப வகுப்பு நாவலர் வீதியில் உள்ள New Master Institute இல் நடைபெறும்)

சுடர்: 4 சுக்கில ஆவணி மீ 21 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 5 (06 : 09 : 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY சுதிர்: 236

## அனைத்துக் கட்சி மாநாட்டுக்கு முன்னர்

# பிரேமாவுடன் பேசுவதற்கு எதிர்க்கட்சிகள் விருப்பம்

## மாநாட்டில் பங்குபற்றுவது குறித்து அதன் பின்னரே முடிவுசெய்யப்படும்

கொழும்பு, செப்டம்பர். 6

அனைத்துக்கட்சி மாநாட்டுக்கு முன்னர் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவுடன் சில விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தி முடிவு எடுக்க வேண்டியுள்ளது. அந்தப்பேச்சுக்களின் பெறுபேறுகளைப் பொறுத்தே அனைத்துக் கட்சி மாநாட்டில் பங்குபற்றுவது என்பது குறித்து முடிவு செய்ய முடியும்.

இவ்வாறு ஐந்து கட்சிகளைக் கொண்ட எதிர்க்கட்சி முன்னணியில் அங்கம் வகிக்கும் பிரதான எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி பிரேமதாஸ அழைத்துள்ள அனைத்துக்கட்சி மாநாடு ஆரம்பமாவதற்கு இன்னும் ஒரு வார காலமே இருக்கிறது.

மாநாடு ஆரம்பமாவதற்கு முன்னர் சில விடயங்கள் குறித்து ஜனாதிபதியுடன் பேசி முடிவு எடுக்க வேண்டியிருப்பதாக எதிர்க்கட்சி தரப்பில் கருத்து வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்த விடயங்கள் குறித்து பேசுவதற்கு நேரம் ஒதுக்கித் தரும்படி ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் எதிர்க்கட்சிகள் கோரியிருப்பதாகவும் தெரிய வருகிறது.

நாடாளுமன்றைக் கலைத்து காபந்து அரசாங்கம் ஒன்றிடம் ஆட்சியை ஒப்படைக்கும் முயற்சிக்கு திரு. பிரேமதாஸ இணங்கு வாரா என்பது குறித்து திரு. பிரேமதாஸாவின் கருத்தை அறிவதற்கு எதிர்க்கட்சிகள் விரும்புகின்றன.

அனைத்துக் கட்சி மாநாட்டுக்கு முன்னரே பிரேமதாஸாவின் கருத்தை அறிந்து அதன் அடிப்படையில் மாநாட்டில் பங்குபற்றுவது குறித்து முடிவு செய்யலாம் என எதிர்க்கட்சித் தலைவர்கள் அபிப்பிராயப்படுவதாகவும் தெரிகிறது.

காபந்து அரசு அமைக்கும் முயற்சிக்கு திரு. பிரேமதாஸ இணக்கம் தெரிவிக்காவிட்டால் அனைத்துக்கட்சி மாநாட்டை பகிஷ்கரிக்கவும் முக்கிய எதிர்க்கட்சிகள் முடிவு

(8ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மாநாட்டில் பங்குபற்றும்

வருகிற 13 ஆம் திகதி நடத்தப்படவுள்ள அனைத்துக் கட்சி மாநாட்டில் கலந்து கொள்ளப்போவதாக லிபரல் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், எக்ஸத் லங்கா ஜனதா பக்ஷ ஆகியன அறிவித்துள்ளன.

இதனிடையில் அனைத்துக் கட்சி மாநாடு கூட்டும் ஜனாதிபதி பிரேமதாஸாவின் முடிவை நேற்று நடந்த அரசாங்க நாடாளுமன்றக் குழு வரவேற்றுள்ளது. (ஒ-எ)

## வடக்கில் மின்சாரப் பிரச்சினைக்கு

# ஒரு வார காலத்திற்குள் தீர்வு!

### அமைச்சர் பெஸ்டஸ் அளித்துள்ள உறுதிமொழி

யாழ்ப்பாணம், செப் 6

வடக்கு, கிழக்கில் ஏற்பட்டுள்ள மின்விநியோகத் துண்டிப்புப் பிரச்சினைக்கு ஒரு வாரகாலத்திற்குள் தீர்வு காண தாம் நடவடிக்கை எடுப்பதாக எரிபொருள் மின்சக்தி அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா உறுதியளித்திருக்கிறார்.

இந்த விடயம் குறித்து அமைச்சரைச் சந்தித்த யாழ் மாவட்டத்தின் எம். பிக்களான திரு. வி. கே. யோகசங்கரி, திரு. கே. நவரத்தினம் ஆகியோரிடம் அமைச்சர் இந்த உறுதிமொழியை அளித்ததாக ஈ. பி. ஆர். எல். எவ். விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### யாழ் நிலைமை

யாழ்ப்பாணத்தில் காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை ஒன்றில் 17 மெகாவாட் மின் சக்தியைப் பெறக்கூடிய இரண்டு ஜெனரேட்டர்கள் இருப்பதும் இதில் ஒன்று பல ஆண்டுகாலமாக பழுதடைந்திருப்பதும் இந்தச் சந்திப்பின் போது அமைச்சர்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

பழுதடைந்த ஜெனரேட்டரை உடன் திருத்துவதன் மூலம் குடாநாட்டின் மின்சார பிரச்சினைக்கு உடன் தீர்வு காண முடியும் என தெரிவிக்கப்பட்டது.

இந்த ஜெனரேட்டர்கள் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் பொறுப்பில்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கு மாகாணசபைக்கு

## உதவிப் பொருள் வழங்கல்; இந்தியத்தூதரகம் விளக்கம்

கொழும்பு, செப். 6

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு புனர்வாழ்வு உதவிகளை வழங்கி வருவது சம்பந்தமாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் விளக்கம் அளித்துள்ளது.

தூதரகப் பேச்சாளர் ஒருவர் இது பற்றிச் சொன்னதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு இதற்கு முன்னர் மூன்று தடவைகள் இந்தியா புனர்வாழ்வு உதவிகளை அளித்துள்ளது.

அச்சமயங்களில் எல்லாம் இலங்கையின் குடிவரவுச் சட்டமோ, சுங்கத் திணைக்கள விதிகளோ மீறப்படவில்லை.

முன்னர் நிவாரண உதவிகளை வழங்கியபோது எல்லாம் இலங்கை அரச அதிகாரிகளும் பிரசன்னமாக இருந்தார்கள்.

(8ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



இப்ப கண்களைத் திறந்து என்ன பிரயோசனம்......! எல்லாம் காலம் கடந்து போச்சுப் பாருங்கோ......!!

## கொழும்பு - யாழ் ரயில் மீண்டும் வார இறுதியில்!

யாழ்ப்பாணம், செப் 6

இடை நிறுத்தப்பட்டிருந்த யாழ்ப்பாணத்துக்கான வார இறுதி ரயில் சேவை இவ்வாரம் மீண்டும் நடைபெற இருப்பதாக ரயில்வே திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே வேளை—

திங்கட்கிழமை முதல் கொழும்பு — வவுனியா ரயில் சேவை ஆரம்பமாகி, தினமும் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சரக்கு ரயில்களும் தடையின்றி வரும் எனவும் கூறப்பட்டது. (ஒ-3)

## இரவில் வேட்டு: ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 6

குளப்பிட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் (திங்கள்) இரவு 8.00 மணியளவில் சரமாரியான துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இந்த அசம்பாவிதத்தின் போது ஒட்டுமடம் வாகியான இன்னையா தம்பிராஜா [வயது 57] என்பவர் காயமடைந்தார். [ஒ-9]

## தூதுவரின் அவசர பயணம்

கொழும்பு, செப் 6

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் எல். எல். மெஹ்ரோத்திரா கடந்த சனிக்கிழமை புதுடில்லி பயணமானார்.

அவசர அழைப்பின் பேரிலேயே அவர் புதுடில்லி சென்றார் என்றும்—

அவர் நேற்றிரவு அல்லது இன்று கொழும்பு திரும்பலாம் என எதிர்பார்க்கப்பட்டதாகவும் தூதரகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (உ-எ)

### சுபநேரம்

(06 - 9 - 1989)

ஆவணி 21 புதன்கிழமை

நட்சத்திரம்: விசாகம்

சுபநேரம்:

04-84 முதல் - 06 04 வரை ஞானுகாலம்.

12-04 முதல் 01-84 வரை இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## பிரேமாவின் கண்களை திறக்க

# செய்த ரோஹணவின் கடிதம்

### அரச நாடாளுமன்றக் கூட்டத்தில் ஜனாதிபதியே தகவல்

கொழும்பு, செப். 6

1983 டிசம்பரில் ஜே. வி. பி. தலைவர் ரோஹண விஜேவீர எழுதிய கடிதம் என் கண்களைத் திறக்கச் செய்தன.

—இவ்வாறு கூறினார் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா. நேற்று நடைபெற்ற அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

அங்கு உரையாற்றுகையில் ஜனாதிபதி மேலும் கூறியதாவது:-

1977ஆம் ஆண்டில் ஜே. வி. பி. இயக்கம் வன்முறையைக் கைவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்பியது. 1983 ஜூலையில் அக்கட்சி மீது அவசரகாலச் சட்டத்தின்கீழ் தடை விதிக்கப்படும்வரை எல்லாத் தேர்தல்களிலும், ஜனநாயக நடைமுறைகளிலும் அக்கட்சி பங்கு பற்றியது. இதனை நாம் மறக்க முடியாது.

ஜே. வி. பி. மீண்டும் போராட்ட வழிக்குத் திரும்பியது ஏன்?

இதற்கான காரணத்தை விளக்கும் முக்கிய ஆவணம் ஒன்று என் கைவசம் இருக்கிறது.

1983 டிசம்பர் 8 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதிக்கு ஜே. வி. பி. தலைவர் திரு. ரோஹண விஜேவீர எழுதிய கடிதம் தான் அது.

அந்தக் கடிதத்தில் அவர் எழுதிய விடயங்கள் முக்கியமானவை.

பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தி அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் ஜே. வி. பி.

(8ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் எம். பி. மெரில் நேற்று சுட்டுக்கொலை!

கொழும்பு, செப். 6

அகலவத்தை முன்னாள் எம். பி. மெரில் காரியவாசம் நேற்று இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்றுப் பிற்பகல் இரத்மலானையிலுள்ள அவரது அலுவலகத்துக்குள் பலாத்காரமாக பிரவேசித்த நபர்களே துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அவரின் மெய்ப்பாதுகாவலரும் கொல்லப்பட்டார். அவரது செயலாளர் காயமடைந்தார்.

பெண்கள் விவகார பிரதி அமைச்சராகவும் பணிபுரிந்த திரு. காரியவாசம் இறக்கும் போது ரப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவராக பணிபுரிந்து வந்தார். (ஒ-எ)

## ஓடியவர்கள் மீது சூடு! மூவர் ஆஸ்பத்திரியில்!!

யாழ்ப்பாணம், செப் 6

படையினரைக் கண்டு ஓட முற்பட்டதாகக் கூறப்படும் மூவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

மல்லாகப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் மூவர் காயமடைந்தனர்.

அந்த மூவரும் யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டனர்.

அவர்கள் விவரம் வருமாறு:-

சின்னத்தம்பி பரராஜசிங்கம் (வயது 27), ரவீந்திரநாதன் பொன்னம்பலம் (வயது 28) செல்வநாயகம் பாஸ்கரன் (வயது 21) ஆகியோராவார். [ஒ-9]

## உடுப்பிட்டியில் தேடுதல்

வல்வெட்டித்துறை, செப். 6

நேற்றுக்காலை 10 மணியளவில் உடுப்பிட்டிப் பகுதியில் பலத்த தேடுதல் இடம் பெற்றது. தேடுதலின் போது துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன. (உ-160)

## காணமற்போனவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், செப் 6

கடந்தமாதம் 30ஆம் திகதி காணமற்போனதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் நேற்று யாழ் பழைய பூங்கா வீதியில் சூட்டுக்காயங்களுடன் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

களுவாஞ்சிக்குடி பெரியகல்லாறைச் சேர்ந்த இராசநாயகம் பிரேமதாஸ் (வயது 24) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். (உ-10)

## மின் விநியோகத்தைச் சீரமைக்க

# ஈ. ஜ. மு. தூதுக் குழுவும் முயற்சி

யாழ்ப்பாணம், செப் 6

ஈழவர் ஜனநாயகமுன்னணியின் தூதுக்குழு ஒன்று நேற்று முன்தினம் [திங்கட்கிழமை] மின்சக்தி எரிபொருள் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேராவைச் சந்தித்து வடபகுதியில் ஏற்பட்டுள்ள மின்சாரத் துண்டிப்புக் குறித்துப் பேச்சு நடத்தியது.

இது சம்பந்தமாக ஈ. ஜ. முன்னணி பத்திரிகைக்கு விடுத்த குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மின்சாரத் துண்டிப்பால் வடக்குகிழக்கில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து அமைச்சருக்கு விரிவாகக்கூறப்பட்டது.

இதை அடுத்து அமைச்சர் வடபகுதிக்கு மின்சாரம் வழங்குவது குறித்து உடனடியாக நடவடிக்கைளெடுப்பதாகஉறுதியளித்தார்.

இதற்கு வசதியாக காங்கேசன்துறை சீமெந்து ஆலையிலுள்ள மின்உற்பத்தி இயந்திரங்களைப் பொறுப்பேற்கு மாறுமின்சாரசபைக்கு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை அனுராதபுரம் பகுதியில் தகர்க்கப்பட்ட மின்கோபுரங்களைத் திருத்துவதற்கான வேலைகளும் நடந்து கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார். (ஒ)

## தலைநகரில் தேங்கிக் கிடந்த தபால்கள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், செப் 6

கொழும்பில் தேங்கிக் கிடந்த யாழ்ப்பாணத்துக்கான தபால்கள் நேற்று இங்கு கொண்டுவரப்பட்டன.

ரயில் மூலம் வவுனியாவுக்கு நேற்று முன்தினம் கொண்டு வரப்பட்ட இந்தத் தபால் பொதிகள் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

இதேவேளை அனுராதபுரம் தபால் நிலையத்தில் தேங்கிக் கிடக்கும் நானூறுக்கும் மேற்பட்ட தபால் பொதிகளை இங்கு கொண்டுவந்து சேர்ப்பதற்கான ஏற்பாடுகளும் நடந்துவருகின்றன.

அவை அநேகமாக இன்று யாழ்ப்பாணம் வந்து சேரலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

இங்கு தேங்கிக் கிடக்கும் தபால் பொதிகளை இன்று கொழும்புக்கு அனுப்பவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது (ஒ 3-10)

## பெண் காயம்

வல்வெட்டித்துறை, செப். 6

நேற்றுமுன்தினம்மாலை 5.00 மணியளவில் பருத்தித்துறை வீ. எம். வீதியில் இடம் பெற்ற மோதல் சம்பவம் ஒன்றின் போது இடையில் சிக்குண்டு பெண் ஒருவர் காயமுற்றார்.

சிவகுமாரன் வசந்தாதேவி (வயது35)என்றபெண்மணியே படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார். (உ-160)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனை

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் Medical Books). அதிநவீன கம்பியூட்டர் நூல்கள் (Latest Computer-Books), கதைப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்; ... புத்தகசாலை) இல. 03 பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (1551)

### காணி விற்பனைக்கு

ஆனைக்கோட்டை புக்கை தின்னிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் வீடு, கிணறு, உட்பட 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு. பகுதி பகுதியாகவும் பிரித்துக்கொடுக்கப்படும்: தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: க. ஜெயசூரியர், மெமோறியல் லேன், மானிப்பாய். (2048)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hyline கறுப்பு, வெள்ளை சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் Golden Comet சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் Indian River, புரொயிலர் குஞ்சுகள், இறைச்சிக் கோழிகள். முன் கூட்டியே பதிவு செய்யவும்: பரம் ஏஜென்சி, கிளிநொச்சி. (1767)

Golden comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் பிறவுண் சேவற் குஞ்சுகள் 6ஆந்திகதி புதன்கிழமையும் cristombu farm புரொயிலர் குஞ்சுகள் 7ஆம் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும்; முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (2084)

### புரொயிலர் குஞ்சு விநியோகம்

Christombu Farm, Bairaha Farm புரொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும் விலை குறைக்கப்பட்டுள்ளது. முன் கூட்டியே பதிவு செய்து ஒவ்வொரு வாரமும் பெற்றுக் கொள்ளலாம். சற்குணராசா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (C/3609)

### கோழிக்குஞ்சுகள் விற்பனை

Hyline சிவப்பு, வெள்ளை, பேடு அதி சிறந்த Sekline பேடு புரொயிலர் Dekalb ஒரு நாள் ஒரு வாரக் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதியவும்: P. பத்மநாதன் மாரீசன் கூடல், (சந்திக் கருகில்) இளவாலை. (2106)

### வட்டுக்கோட்டையில் விநியோகம்

பிறிமா, புரொயிலர், பேடு, சேவல் குஞ்சுகள் விநியோகிக்கப்படும்; முன் கூட்டியே பதிவு செய்து கொள்க. தொடர்பு: ராஜ் (ஸ்ரீ முருகன் அரிசி ஆலை முன்பாக) மூளாய் றோட், வட்டுக்கோட்டை. (2019)

### SPOKEN ENGLISH

30 தொடர் வகுப்புகள் சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில். நேரம் பகல் 10 - 11. 30மணி ஆரம்பம் 11- 9- 89 முன்பதிவு செய்தல் வேண்டும்: S. B. Iyar, 12 வைமன் வீதி, நல்லூர். (1898)

### பிரயோக கணிதம் 89

உயர்தர பிரயோககணித மாதிரி வினாத்தாள்களும் விடைகளும், வெளியாகியுள்ளன: மூன்று தொடை வினாத்தாள்களும், விடைகளும் A/L 89, மாணவர்கள் நேரம் கணிப்பிட்டு விடையளிப்பதன் மூலம் பரீட்சைகளுக்குத் தம்மைத்தயார் செய்வதற்கேற்றது. சகலபிரபலபுத்தக விற்பனையாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம். ஆசிரியர் சி. துரையப்பா சென் ஜோன்ஸ் கல்லூரி. (2056)

### தேவை

ஹோட்டல் ஒன்றுக்கு அனுபவமுள்ள சமையற்காரர் ஒருவரும், உதவியாளர் ஒருவரும் உடன் தேவை: தொடர்பு: சவோய் டூறிஸ்ட் ஹோட்டல், கீரிமலை வீதி, காங்கேசன்துறை (சந்தியில் இருந்து 400 m தூரம்) (2059)

அலுவலகம் ஒன்றில் பணிபுரிபவர்க்கு ஆனைப்பந்தி - நல்லூர்ப் பகுதிகளில் விருந்தையுடன் கூடிய அறை வாடகைக்குத் தேவை. 20-9-89க்கு முன் தொடர்பு கொள்ளவும். 595. C/o உதயன். (2053)

3'' அல்லது 4'' பம்ப் டிராக்டரில் பொருத்தி இறைக்கக் கூடியதாக அல்லது இன்ஜினுடன் சேர்ந்த பம்ப் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: க. சோதிநாதன், அரசடி வீதி. திருநெல்வேலி கிழக்கு யாழ்ப்பாணம்: அல்லது சோமரட்ணம் அரசடி வீதி, திருநெல்வேலி, கிழக்கு. (1891)

சகல விதமான பொலித்தீன் பைகளை உற்பத்தி செய்வதில் வெளி நாட்டு அனுபவம் உள்ள ஒருவருக்கு வேலை தேவை; தொடர்பு: 596 C/o Uthayan (2054)

### WANTED

Wanted an experienced middle aged lady in Managing a small Industry to deal with foodstuffs meant for export. please send your Bio - Data on or befor 15-09-89 to the following address Salary negotiable 90 C/o Uthayan Jaffna (2107)

### மணமகன் தேவை

யாழ் உயர்சைவ வேளாள குலத்தைச் சேர்ந்த 34 வயதுடைய விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியைக்கு இவரின் தராதரத்திற்கு அமைவான உத்தியோகஸ்தர் உள்நாட்டிலோ அன்றி வெளிநாட்டிலோ தேவை; தொடர்பு: ஆர். பி. ரீ ... 21 கண்டிவீதி (கோட்டடி) சாவகச்சேரி. (1875)

யாழ். இந்து வேளாளகுல 25 வயது நிரம்பிய அழகிய கன்னி இரசபாவம் ... A/L Pass மணமகளுக்கு வங்கி அரச தனியார் நிறுவனங்களில் பணிபுரியும், அல்லது வெளிநாட்டில் நிரந்தர வேலையுடைய மணமகன் தேவை சீதனம் கொடுக்கப்படும் 593 C/o உதயன்: (2033)

### WIN IN LADIES ACADEMY

1-9 89 முதல் பனையியல் சங்கீத வகுப்புகள் வழமைபோல் கடமைபெறுகின்றன விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் 61/1 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி (1927)

### Typewriter

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3-ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி 3601)

### CLASSES

Classes in cakemaking and icing, sugarflowers, General cookery, Hairstyles, Make -up course, basic scientific dress making, Spoken English with Grammer. Contact Mrs. T. Mather. LawtonRd Manipay South (2026)

### புலமைப் பரிசில் பரீட்சை (ஆண்டு 5)

ஆண்டு 5 புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை (ஒன்பதாவது, 10-09-89 ஞாயிறு 1 30 மணிக்கு நடைபெறும் முற்கூட்டியே பதிவு செய்யவும் நடந்தேறிய பரீட்சை வினாத்தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம் செங்காதரன் ஆஸ்பத்திரியடி வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் (2051)

### தவறிவிட்டது

யாழ் நகருக்கும் கந்தர் மடம் சந்திக்கும் இடையில் கையில் கட்டும் உருத்திராட்சம் (காப்பு) மாலை சைக்கிளில் செல்லும்போது தவறி விழுந்து விட்டது 12 காப் கொண்ட 4 பவுண் எடை உள்ள மாலை கண்டெடுத்துக் கொடுப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும் ... கோண்டாவில் மேற்கு காளி கோவிலுக்கு உரித்துடையது. தொடர்பு: ஸ்ரீராஜ குருக்கள் கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (2058)

### வாடகைக்கு

பலாலி வீதியில் 43 (131) இலக்கத்தில் உள்ள கடை வாடகைக்கு விடப்படும்: (அம்மன் வீதி சந்தியில்) தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ''அரியம் இல்லம்'' 43 (131), பலாலி வீதி, கந்தர்மடம். யாழ்ப்பாணம். (2050)

மேலதிகக் கொடுப்பனவுப் பிரச்சினை

# படகுச்சேவை ஊழியர்கள் அடையாள வேலைநிறுத்தம்

நெடுந்தீவு, செப் 6

கடந்த நான்கு மாத காலமாக தமக்குரிய மேலதிக வேலைக் கொடுப்பனவுகள் வழங்கப்படாததை ஆட்சேபித்து நெடுந்தீவு-குறிகாட்டுவான் - அனலைதீவுப் படகுச் சேவை ஊழியர்கள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர்.

இதனை அடுத்து படகு ஊழியரின் கொடுப்பனவுகளை உடன் வழங்குமாறும் —

சேவை தடங்கலின்றி நடைபெற நடவடிக்கை எடுக்குமாறும்—

நெடுந்தீவு முன்னேற்றக் கழகம், கிழக்கு சனசமூக நிலையம், மரம் நடும் இயக்கம், கிராம முன்னேற்றச் சங்கம் ஆகியன பெருந்தெருக்கள் அதிகார சபையிடம் கேட்டுள்ளன:

இது தொடர்பாக நெடுந்தீவு முன்னேற்றக் கழகம் அமைச்சர் செல்லச்சாமியுடனும் தொடர்பு கொண்டுள்ளது.

ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் உட்பட சகல சலுகைகளையும் வழங்குமாறும் ஏற்கனவே திணைக்கள அதிகாரிகளுக்கும் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்களில் இது ஏற்றுக்கொள்ளப்பட்டது எனவும் கழகம் சுட்டிக்காட்டி உள்ளது. (இ-111)

## முகமாலை வேளாங்கண்ணி நவநாள் உற்சவம்

பச்சிலைப்பள்ளி, செப் 5

முகமாலை புனித ஆரோக்கிய மாதா (வேளாங்கண்ணி) தேவாலய வருடாந்த நவநாள் உற்சவம் எதிர்வரும் எட்டாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை நான்கு மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் மாலை நான்கு மணிக்கு தோவில் முகமாலை பங்குத் தந்தை திருப்பலி பிரான்சிஸ் அடிகளால் நடாத்தப்படும்.

சனிக்கிழமை மாலை நான்கு மணிக்கு நற்கருணை ஆராதனையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை ஏழு மணிக்கு யாழ் மறை மாவட்ட ஆயர் அருட்திரு. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் தலைமையில் கூட்டுத் திருப்பலி பூசையும் திருச்செருபவனியும் இடம்பெறும்.

இவ்வுற்சவத்தையொட்டி விசேட போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க 117)

## முதுமாணிகலாநிதிபடிப்புக்கு ஜப்பானிய புலமைப் பரிசில்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஜப்பான் புலமைப்பரிசில் திட்டம் இம்முறையும் இரண்டாவது தடவையாக மேற்கொள்ளப்படவுள்ளது.

இலங்கை உட்பட வளர்முக நாடுகளின் பிரஜைகளுக்கு இந்த புலமைப்பரிசில் வழங்கப்பட உள்ளது.

முகாமைத்துவம், தொழில் நுட்பம், அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட ஏனைய நடவடிக்கைகளுக்கு இந்தப் புலமைப் பரிசில் வழங்கப்படும்.

முதுமாணிப் படிப்புக்காக புலமைப்பரிசில் பெறவிருப்போர் பட்டதாரிகளாகவும் கலாநிதிப் படிப்புக்காக புலமைப் பரிசில் பெறவிரும்புவோர் முதுமாணிப் பட்டம் பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும்.

அத்துடன் சம்பந்தப்பட்ட துறையில் ரண்டு வருட அனுபவமும், உயர்மட்டக் கல்வித் தகைமையும் கொண்டிருத்தல் வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாணய சங்கங்கள்

## நுகர்ச்சிக்கும் முயற்சிக்கும் கடனை பயன்படுத்த வேண்டும்

### கூ. ச. கூட்டத்தில் உரை

சுழிபுரம், செப் 6

ஐக்கிய நாணய சங்கங்கள் தங்கள் செயல்பாடுகளை கடன் வழங்குவதோடு மட்டும் நிறுத்தக் கூடாது கடன் நுகர்ச்சிக்கு மட்டுமன்றி, முயற்சிக்கும் பயன் படுத்த வேண்டும்.

கூட்டுறவுப் பரிசோதகர் திரு. பொ. இரத்தினசபாபதி பண்ணாகம் மக்கள் சிக்கன உதவி கூட்டுறவுச் சங்க விசேட பொதுக் கூட்டத்தில் கலந்து பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. செ. திருநாவுக்கரசு தலைமையில் கூட்டம் நடைபெற்றது

தணிக்கையாளர் திரு. சு. வாமதேவன் கணக்கறிக்கையைச் சமர்ப்பித்து மிகக் குறுகிய காலத்தில் அதிக இலாபம் கிடைத்த விபரத்தை சபைக்கு விளக்கினார்.

சங்கச் செயலாளர் திரு. சோ. கா. வேலாயுதர் நன்றியுரை கூறினார். தேநீர் விருந்தும் நடைபெற்றது [க-28]

## கேரதீவு - சங்குப்பிட்டி பஸ்சேவை 11 இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம் செப். 6

வடபிராந்திய போக்குவரத்துச் சபையால் யாழ்ப்பாணம் -மன்னார் நேரடி பஸ்சேவை எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் நடத்தப்பட இருக்கிறது.

கேரதீவு - சங்குப்பிட்டி ஊடாக நடத்தப்பட இருக்கும் இவ் பஸ்சேவைக்கு பஸ் கட்டணம் இருபது ரூபா அறவிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இக் கட்டணத்தில் பாதைச் சேவைக்கானகட்டணம் அடங்காது என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ - 3)

## கும்பாபிஷேகம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப் 6

இன்று 6 ஆம் திகதி நடைபெற இருந்த அளவெட்டி வடக்கு சேணிக்கரை வைரவராலய ஜீர்ணோத்தாரண மகா கும்பாபிஷேகம் ஒத்திவைக்கப்பட்டது. (இ)

## ''சிவபூரணி கவிதாஞ்சலி'' நூல்வெளியீடு

யாழ்ப்பாணம் செப் 6

க. வீரகத்தி அவர்களின் ''சிவபூரணி கவிதாஞ்சலி'' நூல் வெளியீட்டு விழா இன்று புதன் பிற்பகல் 2 30 மணிக்கு ஊரெழு சிவபூரணி முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இடம்பெறும்.

அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. சி. சிவலிங்கராஜா நயவுரை வழங்குவார்.

இந்த விழாவுக்கு அனைவரையும் சமூகம் தருமாறு ஊரெழு சைவாலய முன்னேற்றக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (த)

## பாடசாலைக்கு சமுகமளிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், செப் 6

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள் அனைவரையும் உடனடியாக பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யூனியன் கல்லூரி அதிபர் திரு நா ஸ்ரீபுஸ்பநாதன் பாடசாலை அபிவிருத்திச் சங்க உதவிக்காரியதரசி திரு இ திருநாவுக்கரசு ஆகியோர் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஈ என் டி எல் எவ் ரெலோ, ஈ பி ஆர் எல் எவ் ஆகியவை இணைந்து மாணவர் பாதுகாப்பு தொடர்பாக அறிக்கை விடுத்துள்ளன.

எனவே இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மாணவர்கள் சீருடையில் பாடசாலைக்கு வருகை தந்து கல்வியைத் தொடர வேண்டும்.

இப்படி அத... கோளில் வேலும் ... கப் பட்டுள்ளது

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும் நன்றி நவிலலும்



### அமரர் வல்லிபுரம் தம்பு

ஆண்டவன் படைத்தார் ·10· 1906
ஆண்டவன் அழைத்தார்: 07· 08 1989

அன்பின் திருவுருவாய்
அறிவின் சுடரொளியாய்
பாசத்தின் உறைவிடமாய்
சிரிப்பில் நிறைமதியாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய்
அந்தி பகலயரா துழைத்து
மகிழ்ச்சியோடு வாழவைத்து
எம்மை ஆறாத்துயரிலாழ்த்தி விட்டுச்
சென்ற எமது அன்புத் தெய்வமே!

உமது ஆத்மா சாந்தியடைய ஆவக்கடவை சித்தி விநாயகரை வேண்டுகின்றோம்.

அன்னாரது அந்தியேட்டிக்கிரியைகள் இன்று 6 9-89 இலும், வீட்டுக்கிருத்தியம் நாளை (7- 9- 89) வியாழக்கிழமை அவரது இல்லத்திலும் நடைபெறும். அவரின் ஆத்ம சாந்திக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,
மனைவி, மக்கள், மருமக்கள்,

... புன்னாலைக்கட்டுவன். (சி/3628)

DIESEL GENERATORS
Available Ex - Stock - Colombo
Power Rating: 3 KVA 5 KVA
Engines: Yanmar / Lister/ Perkins
Importer/Distributor:
United Tractor & Equipment Ltd,
P. O. Box 343,
447 Union Place Colombo - 2.
Telephone: 695461-2 698680-1
For further Details: Contact
108/1. Stanley Road Jaffna.
UTE - the journey continues even after the Sale
[2061]

### 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
**சாமிநாதர் றெபின்சன்**
(பாலா)

ஆண்டவன் படைப்பு: 06 - 09 - 1963
ஆண்டவன் அழைப்பு: 06 - 09 - 1985

ஆண்டுகள் நான்காயிடினும்
ஆறவில்லை எங்கள் நெஞ்சம்
ஆண்டாண்டு தோறும்
அழுது புரண்டிடினும்
மாண்ட உன தெண்ணம்
மாறிடுமோ எம் முளத்தில்?
ஆண்டவனை வேண்டி
அழுது புலம்பி நிற்கும்

பெற்றோர், சகோதரர்,
உற்றோர், உறவினர்கள்.

குருநகர்,
யாழ்ப்பாணம். [2060]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்:

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

பொருள்:

உழவுசெய்து அதனால் கிடைத்ததை உண்டு வாழ்கின்றவரே உரிமையோடு வாழ்கின்றவர். மற்றவர் எல்லாரும் பிறரைத் தொழுது உண்டு பின்செல்கின்றவரே.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி: 24805
யாழ்ப்பாணம்: 22073
06 09 - 1989 ; பெ; இல. 93

## அரசுக்கு ஒரு சவால்!

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் கிராம சேவையாளர்களில் ஒரு சாரார் இன்னமும் அவர்களின் பதவிகளில் உறுதிப்படுத்தப்படவில்லை. நியமனம் பெற்றுப் பத்து வருடங்களுக்கு மேலாகியும் பதவி உயர்வோ, வருடாந்தச் சம்பள உயர்வோ வழங்கப் படவில்லை.

சிங்களத்தில் தேர்ச்சி அடையவில்லை என்ற காரணத்தாலேயே அவர்கள் நியமனம் பெற்ற இத்தனை காலமாகியும் ஆரம்பத்தில் வாங்கிய அதே சம்பளத்துடன் தொடர்ந்து கிராமங்களுக்குச் சேவை செய்து வருகிறார்கள்.

1978 ஆம் ஆண்டில் விசேட சேவை உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்று 1987 ஆம் ஆண்டில் கிராம சேவையாளர்களாகப் பதவி மாற்றப்பட்டவர்களே தமது தொழிலில் எவ்வித விருப்பாடும்; விருத்தியும், உயர்ச்சியும் இன்றி குறைந்த சம்பளத்துடன் கஷ்டப் படுகிறார்கள்.

வாழ்க்கைச் செலவு வானத்தின் முகட்டைத் தொட்டு நிற்கும் இந்நாளில் போதாத வருமானத்துடன் திண்டாடுகிறார்கள். இவர்களில் பலர் குடும்பஸ்தர்கள் பிள்ளைகளின் கல்விச் செலவுக்கு என்ன செய்வது, சாப்பாட்டுச் செலவுக்கு என்ன செய்வது என்பது தெரியாமல் நாளாந்த வாழ்க்கையோடு போராடுகிறார்கள்; பலர் கடன் வாங்கிக் காலத்தைக் கடத்துகிறார்கள்!

இத்தனைக்கும் இவர்களது சேவை தமிழ் பேசும் மக்கள் வாழும் வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு உட்பட்டது தான். தமிழ் பேசும் மக்களுடனேயே அவர்களது சகல நாளாந்த அலுவல்களும், நாளாந்தப் பணிகளைச் செய்வதற்கு அவர்கள் சிங்களத்தையோ அல்லது ஆங்கிலத்தையோ கண்ணெடுத்தும் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிர்வாக மொழியாகத் தமிழ் அங்கீகரிக்கப்பட்டு இருபது வருடங்கள் கழிந்து விட்டன. அந்தப் பகுதியில் மட்டுமே பணிபுரியும் அரச ஊழியர்கள் சிங்களத்தில் தேர்ச்சி அடைந்தால் தான் பதவியில் உறுதிப்படுத்தப்படும், சம்பள உயர்வு வழங்கப்படும், பதவி உயர்வு தரப்படும் என்ற நிபந்தனைகள் கொடூரமானவை.

தமிழ் மக்களுடனேயே பழகி, அவர்களது தேவைகளையே நிறைவேற்றப் பணிபுரியும் அலுவலர்களிடம் தமிழ் நிர்வாகமொழி என்று கூறிக்கொண்டு சிங்களத்தில் தேர்ச்சி அடையுமாறு நிர்ப்பந்தித்து அவர்களை அவர்களின் வாழ்க்கையைத் தண்டிப்பது அநீதியானது. ஒருவகையில் மனித உரிமை மீறலுமாகும்.

சிங்களத் தேர்ச்சி நிபந்தனை இப்போது மேலும் ஒவ்வாத ஒன்று. தமிழும் இந்த நாட்டின் ஓர் உத்தியோக மொழி. அதற்குப் பின்னரும் தமிழ் ஊழியர்கள் குறிப்பாகத் தமிழ்ப் பகுதிகளிலேயே பணிபுரியும் தமிழ் பேசும் ஊழியர்கள் சிங்களத்தில் தேர்ச்சி அடைய வேண்டும் என்ற நிபந்தனை செல்லுபடியாகாது; அதனைத் தொடர்ந்தும் தமிழ் ஊழியர்கள்மீது திணிப்பது சட்ட விரோதமானது.

தமிழ் உத்தியோக மொழியாவதற்கு முன்னர் சிங்களத்தில் தேர்ச்சி அடைவதாக இணங்கி நியமனங்களைப் பெற்றதால் தமிழ் ஊழியர்கள் அந்த நிபந்தனையை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று கோணல் நியாயம் கற்பிக்க அரசு முனையக்கூடாது.

அவ்வாறு நிர்ப்பந்திக்க முயலுமானால் தமிழர்களுக்கு உரிமை வழங்குவதற்காக அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம் என்பதெல்லாம் வெறும் செப்படி வித்தையாக முடியும். உதாரணமாக தமிழ்மொழி உத்தியோக மொழியாகி விட்டால் அதன்கீழ் கிடைக்கக்கூடிய பலன்களை சம்பந்தப்பட்ட சட்டம் அமுலுக்கு வந்ததன் பின்னர் தான் தமிழர்கள் அனுபவிக்க உரித்தை உள்ளவர்கள் என்ற நிலைப்பாட்டை அரசு எடுக்குமானால் அது கண்டிக்கப்பட வேண்டியது.

தமிழர்களின் உரிமைகளை வழங்க அரசு மனதார விரும்பாமல் வழங்குவதாக வெளிவேஷம் போடுகிறது என்பதே அதன் அர்த்தமாகிவிடும். தமிழர்களுக்கு உரிமை வழங்கும் விடயத்தில் சொல்லொன்றும் செயல் வேறுமாக அரசு வெறும் பம்மாத்துக் காட்டுகிறது என்பதே உண்மை நிலையாகிவிடும்.

தமிழர்கள் உரிமைகளைத் தாராளமாக வழங்கும் விருப்பம் உண்டென்பதை நிரூபிக்க தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு அவர்கள் 1987 தமிழ் உத்தியோக மொழிச் சட்டத்துக்கும் பின்னர் சேர்ந்தவர்களாக இருப்பினும் சரி, அதற்கு முன்னர் அரச சேவையில் சேர்ந்தவர்களாயினும் சரி சிங்களத் தேர்ச்சி நிபந்தனையை நீக்க வேண்டும்.

அவ்வாறு செய்து தமிழர்களுக்கு உரிமை வழங்குவதில் கபடத்தனம், பம்மாத்து எதுவும் இல்லை என்பதை நிரூபிக்குமாறு தமிழ் மக்கள் சார்பில் சவால் விடுகிறோம்!

## சாந்தியைத் தருவாய் தாயே!

மறவர் குல தெய்வமாய் விளங்கும் வாரணியே!
பாரில் நம்மினம் படுந்துயர் போக்கும் பூரணியே!
அகிலாண்ட கோடி மக்களை ஆட்கொள்ளும் ஆரணியே!
அடியவர்களுக்கு அருள்பொழியும் நாரணியே!
தெல்லியூர்ப்பதியில் தங்கியே புவனம் தன்னைக் காக்கும் அன்னையே!

தரணியில் சாந்தியைத் தருவாய் நீயே!!!

மாவையூர் ஜெயா ஞானசுந்தரம்
(இன்று தர்க்கை அம்மன் 6 ஆம் திருவிழா)

## செவிப்புலன் இழந்தோருக்கு சுயதொழில்

யாழ்ப்பாணம், செப். 6

செவிப்புலன் இழந்தோருக்கான சுயதொழில் பயிற்சி நிலையம் ஒன்று அண்மையில் கைதடியில் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது.

மேற்படி நிலையத்தில் பயிற்சி பெற விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் கைதடி நவீல்ட் பாடசாலையிலுள்ள செவிப் புலனற்றோர் புனர்வாழ்வு நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

பயிற்சிக் காலத்தில் ஊக்குவிப்பு ஊதியம் வழங்கப்படும் எனவும் பயிற்சி பெற விரும்புவோர் தங்குமிட வசதிகளைத் தாமே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப் படுகிறது. (க)

# ஒட்டுசுட்டானுக்குதனியான உதவி அரச அதிபர் பிரிவு

### ஜனவரி முதல் இயங்கவைக்க முயற்சி

புதுக்குடியிருப்பு, செப். 6

ஒட்டுசுட்டானுக்கு புதிய உதவி அரசாங்க அதிபர் பிரிவொன்று ஏற்படுத்தப்பட உள்ளது.

இதனை 1990 ஜனவரி முதல் இயங்க வைப்பதற்கான முயற்சிகளை முல்லைத்தீவு அரசாங்க அதிபர் க. பொன்னம்பலம் மேற்கொண்டுள்ளார்.

ஒட்டுசுட்டான் தற்போது புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்துவருகிறது. இதற்கான பணிமனையும் புதுக்குடியிருப்பிலேயே இருப்பதால் ஒட்டுசுட்டான் பகுதி மக்கள் அலுவல்களுக்காக நீண்ட தூரம் பயணம் செய்யவேண்டி உள்ளது.

புதிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுடன் முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள தண்டுவான் போன்ற கிராமங்கள் சேர்க்கப் படும் எனத் தெரிகிறது.

அதேவேளை புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவுடன் அம்பலவன், பொக்கணை போன்ற கிராமங்கள் சேர்க்கப்படும்.

மாங்குளம், ஒலுமடு ஆகிய பகுதிகள் தற்போதைக்கு ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலேயே இருக்குமென்றும் காலப்போக்கில் அப்பகுதிகளுக்கும் புதிய பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும் என்றும் அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர். (இ-126)

## தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம் செப். 6

யாழ்-மாநகரசபை நல்லூர் கந்தசாமிகோவில் உற்சவத்தை யொட்டி நடத்திய சமய அறிவு, பண்ணிசைப் போட்டிகளில் தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி மாணவிகள் 4 பிரிவுகளில் முதலிடத்தைப் பெற்று தங்கப்பதக்கங்கள் பெற்றனர்.

சமய அறிவுப் போட்டியில் கீழ்ப்பிரிவில் செல்வி அஜிந்தா சண்முகராசா, மத்தியபிரிவில் செல்வி ஆரணி தம்பிராசா மேற்பிரிவில் செல்வி சிவதர்சினி சிவரத்தினம், அதிமேற்பிரிவில் செல்வி ஜெயரஞ்சினி இராஜநரை பண்ணிசைப் போட்டியில் கீழ்ப்பிரிவில் செல்வி, சிவரதி சிவபாலன் ஆகியோர் முதலாம் இடத்தைப்பெற்று தங்கப்பதக்கம் பெற்றனர். (இ - 5)

வடமராட்சி கிழக்கில்

# நடமாடும் உ. அ. அதிபர் பிரிவுகள்

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடமாடும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான நடைமுறை அமுல்படுத்தப்படவுள்ளது.

மணற்காடு, குடத்தனை வடக்கு, குடத்தனை கரையூர், பொற்பதி, அம்பன், குடாரப்பு, நாகர்கோயில் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய பகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர் பிரிவின் நடமாடும் சேவை குடத்தனை உப அலுவலகத்தில் வாரத்தில் ஒரு நாள் வியாழக்கிழமைகளில் நடைபெறவுள்ளது.

செம்பியன்பற்று, மாமுனை, நெல்லியான், மருதங்கேணி, உடுத்துறை, தாளையடி, வெற்றிலைக்கேணி, கண்டிக்குளம், முள்ளியான், கட்டைக்காடு. ஆழியவளை ஆகிய பகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர் பிரிவின் நடமாடும் சேவை செம்பியன்பற்று உப அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமைகளில் நடைபெறவுள்ளது.

அத்துடன் புதன்கிழமைகளில் சகல பிரிவுகளையும் சேர்ந்த கிராம சேவக அதிகாரிகளுக்குரிய வழமையான கூட்டம் நடைபெறும்.

வடமராட்சி உதவி அரசாங்க அதிபர் திரு. தா. சந்திரசேகரம் இத் தகவல்களை தெரிவித்தார். (அ-118)

## இராச கோபுர திருப்பணி

சண்டிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பன் தேவஸ்தான இராசகோபுரத் திருப்பணி வேலைகளுக்கான அடிக்கல் நடும் விழா நாளை வியாழக்கிழமை காலை 6. 45 மணிக்கு ஆரம்பமாகிறது.

## சங்காபிஷேகம்

விமன்காமம் விணியவரை இராஜராஜேஸ்வரி ஆலய கும்பாபிஷேகதினத்தை யொட்டி சங்காபிஷேகம் மணவாளக் கோலவிழா தண்டிகை உற்சவம் சிறப்பாக நடைபெற்றன. (இ-3)

## சாவகச்சேரி வீரகத்தி விநாயகர்

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று 6 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

பதினைந்தாம் திகதி விசேட அபிஷேகத்துடன் விழாபூர்த்தியடையும். (த-117)

## புங்குடுதீவு துர்க்காதேவி கும்பாபிஷேகம்

புங்குடுதீவு மேற்கு துர்க்காதேவி ஆலய புனருத்தாரண பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை 7ஆம் திகதி நடைபெறும்.

இதற்கான கிரியைகள் கடந்த 3ஆம் திகதி ஆரம்பமாயின.

இன்று புதன்கிழமை 11 மணிக்கு தைலாபியங்கமும் நாளை வியாழன்காலை கும்பாபிஷேகமும் இடம்பெறும்.

## இலட்சார்ச்சனை

நாட்டில் சுபீட்சம், அமைதி சமாதானம் நிலவ வேண்டி இணுவில் கன்னகை அம்மன் கோவிலில் இன்றுமுதல் இலட்சார்ச்சனை நடைபெறவுள்ளது.

இன்று 6ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை இலட்சார்ச்சனை தினமும் நடைபெறும். (த-90)

## கரைச்சிக்குடியிருப்பு வீரகத்தி விநாயகர்

யாழ்ப்பாணம், செப். 6

முள்ளைதீவு கரைச்சிக் குடியிருப்பு அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தேர்த் திருவிழா 14 ஆம் திகதியும் தீர்த்தத்திருவிழா 15 ஆம்திகதியும்நடைபெறும்.

சமய சந்திகளில்

## முத்து விநாயகப் பிள்ளையார் ஆலயத்தில்

யாழ்ப்பாணம், செப். 6

நல்லூர் ஸ்ரீ முத்துவிநாயகப் பிள்ளையார் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை காலை ஏழுமணி அளவில் பாலஸ்தாபனம் நடைபெற இருக்கிறது.

1863 ஆம் ஆண்டு நல்லூர் மேற்கு வீதியில் ஸ்தாபிக்கப்பட்ட இவ்வாலயத்தை புனரமைப்புச் செய்வதற்காக பாலஸ்தாபனம் செய்யப்பட இருக்கிறது.

இன்று காலை 6 30 மணியில் இருந்து கிரியைகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆலய திருப்பணி வேலைகளுக்கு உதவ விரும்புவர்கள் ஆலய தர்மகர்த்தாவுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ- 8)

## அடைக்கலமாதா நவநாள் திருவிழா

குருநகர், செப் 6

யாழ்நகர் ஆஸ்பத்திரி வீதி அடைக்கலமாதா ஆலய வருடாந்த நவநாள் திருவிழா கடந்த மாதம் 30ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தினமும் மாலை 5-30 மணிக்கு செபமாலை, ஆராதனை, மறையுரை; திருப்பலி நடைபெறும்.

7ஆம் திகதி மாலை 6 மணிக்கு நற்கருணை ஆராதனை, சற்பிரசாதச் சுற்றுப்பிரகாரம் நடைபெறும்.

8ஆம் திகதி காலை 7மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பெறும்.

மாலை 5 மணிக்கு திருச்சொரூப ஊர்வலம் நடைபெற்று சொரூப ஆசீர்வாதம் வழங்கப்படுவதுடன் திருநாள் கொண்டாட்டங்கள் நிறைவடையும். (த-51)

## மாவடி சித்திவிநாயகர்

மாங்குளம், செப். 6

மாங்குளம் மாவடிச்சித்தி விநாயகர் ... உற்சவம் இன்று 6 ஆம் திகதி புதன் ... கும்பாபிஷேகமும் ... (த- 94)

# நாவலர்-விபுலானந்தர்விழா சிறப்பாக நடத்த ஏற்பாடு

கொழும்பு செப். 06

நாவலர் விழா விபுலாநந்தர் விழா ஆகியவற்றை சிறப்பாக நடத்த இந்து சமய கலாசார அமைச்சு ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

இப்படி துணை அமைச்சர் பி. பி. தேவராஜ் கொழும்பில் அண்மையில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழா ஒன்றில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் "இந்தியாவில் இருந்து தமிழ் நூல்கள் இப்போது வருவது இல்லை. இந்தக்குறையைப் போக்க நாம்நிறைய இலக்கிய வடிவங்களை நூல் வடிவில் கொண்டுவர வேண்டும்" - என்று குறிப்பிட்டார்.

கவிஞர் எம். பாலகிருஷ்ணன் இரு வேறு எஃகுப பூக்கள்' என்ற கவிதை நூல் வெளியீட்டு விழாவில் துணை அமைச்சர் பிரதம அதிபதியாகக் கலந்து கொண்டு பேசினார். (த - எ)

# வடமராட்சி அகதிகளுக்கு தீவுப் பகுதி மக்கள் உதவி

வடமராட்சிப் பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் சம்பவங்களினால் பெரும் எண்ணிக்கையான மக்கள் தீவுப்பகுதிகளுக்கு அகதிகளாக வந்து தஞ்சம் அடைந்துள்ளனர்.

மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை ஆகிய இடங்களிலுள்ள பொதுஸ்தாபனங்களிலும் சர்வோதய நிலைய மண்டபங்களிலும் தஞ்சமடைந்த அகதிக் குடும்பங்களுக்கு இப்பகுதி மக்கள் உதவிகள் செய்து வருகின்றார்கள்.

வேலணை பல நோக்குக்கூட்டுறவுச் சங்க கிளைகளில் கிராமசேவை அலுவலர்களின் சிபார்சின் பேரில் அகதிக் குடும்பம் ஒன்றுக்கு 3 கிலோ அரிசி, 3 கிலோ மா, 3 கிலோ சீனி, தீப்பெட்டி குழந்தைகள் இருப்பின் நெஸ்பிறே பைக்கட் ஆகியவை உடன் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் தொடர்ச்சியாக உணவுப் பொருள்கள் கிடைக்குமா என்பது சந்தேகத்துக்குரியதாக இருக்கின்றது என்று அகதி குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார். (க-88)

## குடமுழுக்கு

கழிபுரம் மேற்கில் புதிதாக கட்டப்பட்ட அரிகரபுத்திரனார் ஐயனார் கோவில் கும்பாபிஷேகம் நாளை 7ஆம் திகதி வியாழக்கிழமை பகல் நடைபெறவுள்ளது.

சுமார் பத்து இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட கோவிலின் குடமுழுக்கைத் தொடர்ந்து நாற்பதைந்து தினங்கள் திருவிழா நடைபெற்று மண்டலாபிஷேகம் நடைபெற பரிபாலன சபையினர் ஏற்பாடு செய்துள்ளனர். (க- 28)

## பனையடி விநாயகர் கும்பாபிஷேகம்

பச்சிலைப்பள்ளி, செப். 6

மட்டுவில் வடக்கு பனையடி விநாயகருக்கும், பரிவாரங்களுக்குமான மகாகும்பாபிஷேகம் இன்று 6 ஆம் திகதி நடைபெறும். (த-117)

## பொதுஜன திருமுகம்

### தேசிய அடையாள அட்டை

இன்றைய நெருக்கடி மிக்க காலத்தில் மக்களின் உயிர் நாடியாய் இருப்பது அடையாள அட்டையே; நான் கொக்குவில் மத்தி கிராம சேவகர் பிரிவின் ஊடாக 02-02-1989 இல் அடையாள அட்டையைப் பெறுவதற்கு விண்ணப்பித்திருந்தேன். ஏழுமாதங்கள் கடந்தும் இன்னும்எனக்கு அதுகிடைத்ததாக இல்லை; அத்துடன் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்ததற்கான பற்றுச் சீட்டையும் தொலைத்து விட்டேன் ஆதலால் நான் பெரும் சிரமத்துக்குள்ளாகியுள்ளேன்; என்போன்ற வேறு சிலரும் இவ்வாறான சிரமத்துக்குள்ளாகியுள்ளனர்; ஆகையால் இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவில் உரிய கவனம் எடுத்து என் போன்றோரின் சிரமத்தைப் போக்குவார்கள் என எதிர்பார்க்கின்றேன்;

மா. மதி,
கொக்குவில்.

### பொலிகண்டி ட்ரான்ஸ்போமர்

கடந்த இரு மாதங்களுக்கு மேலாக வடகீழ் தமிழ் மாநிலத்துக்கான நீர் மின்சாரம் தடைப்பட்டிருக்கின்ற போதிலும் களனிகம் மின்சாரசபை காரியாலயம் சுழற்சி முறையில் மட்டுப்படுத்தப்பட்ட மின் விநியோகத்தை மேற்கொள்கின்றது: எனினும் இலங்கை மின்சார சபையின் வடமராட்சி கிளை அலுவலகத்தின் அசமந்த போக்கினால் பொலிகண்டி, கொற்றாவத்தை கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இந்த சுழற்சிமுறையின் சாரத்தினை பலனடைய முடியாதுள்ளனர்.பொலிகண்டியில் அமைந்துள்ள மின்சார டிரான்ஸ்போமர் பழுதுற்று இருமாதங்களுக்கு மேலாகியும் அதனைத் திருத்தியமைக்க இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆகவே வடபிராந்தியத்துக்கான மின்சாரசபை பொறுப்பதிகாரி இது விடயமாக உடன் தலையிட்டு பொலிகண்டி, கொற்றாவத்தை, மக்களின் குறை நீக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

— பொலிகண்டியான்

### கொடித் தம்பம்

மீசாலை வடக்கு இராமாவில் கந்தசுவாமி கோவிலுக்கு சுமார் ஐம்பதினாயிரம் ரூபா மதிப்புடைய கொடித் தம்பம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. (க-75)

## கண்டதும் கேட்டதும்

உலகத்திலே மாற்றங்கள் அடிக்கடி ஏற்படுவதுண்டு; அதுவும் அரசியல் உலகிலே இது சர்வசாதாரணம்;

சோவியத் யூனியனில் ட்ரொஸ்கிக்கு அடித்திருக்கிற யோகத்தைப் பாருங்கள்;

சோவியத் யூனியனின் எதிரி எனக் கருதப்பட்ட ட்ரொஸ்கியின் நூல்கள் இன்றைய கோர்ப்பச்சேவின் ஆட்சியில் வெளிவர இருக்கின்றன;

இது போலவே சீனாவிலும் மாசேதுங்குக்கு மீண்டும் 'மவுசு' வந்திருக்கிறது என்று கூறுகிறார்கள்.

கலாசாரப் புரட்சி முடிவடைந்த பின்னரும்,தெங்சியாஓபிங் அதிகாரத்துக்கு வந்த பின்னரும் மாசேதுங் மீது இல்லாத பொல்லாத பழிகள் எல்லாம் சுமத்தப் பட்டன.

ஆனால் தியென் அன் மென் சதுக்க ஜனநாயக இயக்கத்துக்குப் பின்னர் சீன அரசியலில் இருதரப்பிலும் மாசேதுங்குக்குப் பாராட்டு ஒருவகையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது;

ஜனநாயக உரிமைகளுக்கான இயக்கத்தை ரத்த வெள்ளத்தில் அடக்கிய சீன அரசுத் தலைவர்கள் மாசேதுங்கின் பல [கலாசாரப் புரட்சி] நடைமுறைகளைத் தற்போது கடைப் பிடிக்கின்றார்கள். மாசேதுங்கைத் திட்டுவதையும் குறைத்துக் கொண்டுள்ளார்கள்.

மறுபுறத்தில் மாசேதுங்கின் கம்யூனிஸ சர்வாதிகாரத்தை விரும்பாத ஜனநாயக உரிமை ஆதரவாளர்கள் தெங்சியாஓபிங்குடன் ஒப்பிடும் போது "மாசேதுங் எவ்வளவோ தேவலை" என்று அபிப்பிராயம் தெரிவிக்கின்றார்கள்;

பாவம் மாசேதுங்! இறந்தும் இருபக்க இடியாயிருக்கின்றது;

— செய்தி லோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13ஆவது வருட அஞ்சலி



தோற்றம்:
30 - 05 - 1914

மறைவு:
30 - 08 - 1976

### ஆர். செல்லையா
(சண்றைற் றைக்கிளினர்ஸ் ஸ்தாபகர்)

அன்பின் உறைவிடமாய், பாசத்தின் சிகரமாய் வாழ்ந்து எம்மையெல்லாம் வாழ்வாங்கு வாழ வைத்த எங்கள் குடும்பத் தலைவனே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்;

உங்கள்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

80/2, மருதடி லேன்.
நல்லூர், யாழ்ப்பாணம்; (சி/8617)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
18-09-1950

மறைவு:
06-09-1984

### திரு. அலோஷியஸ் அமிர்தநாதன்
[பொறியியலாளர்]

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,
மனைவி. பிள்ளைகள், பெற்றோர்,
உறவினர்கள்.

68, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்; [1883]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் சின்னத்தப்பி சதாசிவம்
[கச்சேரி — கிளிநொச்சி]

மலர்வு: 02 - 05 - 1939
உதிர்வு: 07 - 08 - 1989

உன் அன்பு மனைவிக்கு பண்புள்ள கணவனாய்! எம் பச்சிளங் குழந்தைகளுக்கு பாசமுள்ள தந்தையாய் பிறந்த வீட்டிற்கும், புகுந்த வீட்டிற்கும் குல விளக்காய் பகைவரின்றிப் பலருடனும் பண்பாய் வாழ்ந்த எம் வீடு உம்பிரிவால் இன்று பாலைவனம்! நீ போன இடம் என்னும் சோலைவனம்;

நாமிருக்கும் வரை உன் புகழ் என்றும் வாழும்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 7-8 89 திகதியிலும் மறுநாளும் சமயக் கிரியையில் கலந்து கொண்டும் கடிதத் தொடர்பு மூலமும் கவலை தெரிவித்த உறவினர்களும் அயலவர்களும், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் குடும்ப சார்பில் நன்றியைத் தெரிவிக்கின்றோம்;

6-9-89 திகதியில் அவரது இல்லத்தில் நடைபெற உள்ள அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்;

உன்பிரிவால் துயருறும்,
அன்பு மனைவி, பிள்ளைகள்,
உறவினர், அயலவர்கள், நண்பர்கள்;

சிவன் கோவில் வீதி,
புத்தூர் மேற்கு,
புத்தூர். [1899]

வடக்கு கிழக்கு மாகாண

# அமைய ஊழியர் நியமனங்களில் ஊழல்கள் என முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப்; 6
வடக்கு - கிழக்கு மாகாணங்களின் அரச திணைக்களங்களின் அமைய ஊழியர்களின் நியமனங்களில் ஊழல்கள் இடம்பெற்றுள்ளன என்று எமக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன;

வடக்கு கிழக்கு மாகாண முதல்வர் திரு: அ; வரதராஜப் பெருமாள் இவ்வாறு தெரிவித்தார்;

மாவட்ட ரீதியாக அமைய ஊழியர்களின் நியமனங்களை சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் உயரதிகாரிகளே வழங்க வேண்டும் என நாம் அறிவித்திருந்தோம்;

எனினும் அப்படியான நியமனங்கள் வழங்கப்பட்டபோது சம்பந்தப்பட்ட திணைக்கள உயரதிகாரிகள் சிலர் தன்னிச்சையாக நடந்து கொண்டனர் என்று எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன;

இப்படி முதலமைச்சர் தெரிவித்தார்;

ஊழல் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படின் இவ்வாறன நியமனங்கள் நிறுத்தப்படும் எனவும் அவர் கூறினார்;

## பாத்திரங்கள்

பச்சிலைப்பள்ளி, செப்; 6
சாவகச்சேரிப் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய அரசினால் வழங்கப்பட்ட சமையல் பாத்திரங்கள் கிராமசேவை அலுவலர் பிரிவு வாரியாக சாவகச்சேரி முகாமில் வழங்கப்பட்டு வருவதாக தெரியவருகின்றது;

இப்பகுதியில் இடம்பெற்ற வன்செயலின் போது இடம்பெயர்ந்து மீளக் குடியேறியவர்களுக்கே இதில் முன்னுரிமை வழங்கப்படுவதாகவும் அறியப்படுகிறது; (த-117)


## குவைத் நாட்டில் பெண்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு

50 HOSPITAL CLEANERS 4000 சம்பளம்
21 HOSPITAL SUPERVISORS 5000 ,,

வேலை 8.00 மணி நேரம்
சாப்பாடு, தங்கும் வசதி இலவசம்
உடனடிப் பிரயாணம்

மேலும் குவைத், டுபாய், அபுதாபி, சார்ஜா, ராஸல்கைமா, அஜ்மான், சவூதி அரேபியா ஆகிய நாடுகளுக்கும்

பணிப் பெண்கள் உடனடியாகத் தேவை
சம்பளம்: 3500 முதல் 4000 வரை
டெயிலர்· சம்பளம்: 3600 முதல் 5000 வரை

மேலதிக விபரங்களுக்கு பாஸ்போட், பாஸ்போட் சைஸ் படம் 06, ஆகியவற்றுடன் உடனடியாக சமுகம் அளிக்கவும்;

### ஸ்கொயார் டீல்ஸ்
141; செட்டியார் தெரு;
(டமன் ஹவுஸ் மேல் மாடி)
கொழும்பு-11

தொலைபேசி: 436321 (1871)



## அர்ச்சுனா



கல்வி — முயற்சி — பெருவாழ்வு
சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ்

### உங்களுக்குத் தெரியுமா?

நமது நாட்டில் மலரும் ஒரேயொரு சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ் அர்ச்சுனா

40 பக்கங்கள்

சிறுவர்க்கு பொழுது போக்குடன் அறிவுக்கு உசாத் துணையாக அமைவது அர்ச்சுனா

- சிறுகதை, கவிதை
- அறிவுலக அறிமுகம்
- பிறமொழிக் கதைகள்
- விளையாட்டரங்கு
- நகைச்சுவை
- சித்திரத்தொடர்
- கணிதப் புதிர்

இன்னும் பல அம்சங்கள்..

தமிழ் வாசகர் கரங்களில் மிக மலிவு விலையில் தவழும் ஒரேயொரு சிறுவர் சஞ்சிகை அர்ச்சுனா

சிறுவர் இலக்கிய அறிஞர்கள் ஆர்வலர்களின் படைப்புக்களையும் சிறுவர்களின் ஆக்கங்களையும் தாங்கி வெளிவருவது அர்ச்சுனா

விலை - 5/= ஆண்டுச்சந்தா - 70/=

தபாலில் பெற விரும்புவோர் இத் தொகைக்குக் காசுக்கட்டளை / காசோலை பெற்று, நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்று எழுதி உதயன், த.பெ.இல - 23, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

மேலதிக விபரங்களுக்கு:

யாழ்ப்பாணத்தில்:
'அர்ச்சுனா' பணிமனை
2ம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

கொழும்பில்:
முகாமையாளர்
எஸ்.ரி.சி. டீம்,
61, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு

உதயன் - சஞ்சீவி வெளியீடுகள்


## 10-ம் ஆண்டு நினைவஞ்சலி




### திரு. லோறன்ஸ் எட்வேட்
இறப்பு: 1979.09.06

நினைவு கூரும்,
பிள்ளைகள், மருமக்கள், பேரன்.

45, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்: (2052)

## இரண்டாவது ஆண்டு நினைவு அஞ்சலி



### நா. மகேஸ்வரன் (வரன்)

தாயகத்தில்: (ஜனனம்) 1967 - 03 - 04
தியாகத்தில்: (மரணம்) 1987 - 09 - 06

நெய்தல் நிலத்தில் அவதரித்த
மாவீரன் மகேஸ்வரனே
மாண்டு கிடக்கும் எம் மண்ணடிமையை
மீட்டெடுத்திடச் சென்ற வீரத்திலகமே
நீ இந்த மண்ணைவிட்டுச் சென்று
ஈராண்டுகளாகி விட்டதடா

உனது புன்னகையால் பிறர்
மனதைக் கவர்ந்திடும்
உள்ளம் கொண்டவனே — உந்தன்
இனிய மொழி கேட்க இந்த உலகமே
காத்துக்கிடக்குதடா

ஈழத்தாய் ஈன்றெடுத்த அருஞ்செல்வமே
நீ நாளெல்லாம்
நம் ஈழ மக்கள் நமது மொழி தமிழ்
நமது நாடு ஈழம்
என்ற கோசத்திற்கிணங்க
வீரநடை பயின்ற வீரமறவனே
உன் உடல் இந்த உலகைவிட்டு
மறைந்தாலும்
உன்னால் கோசமிடப்பட்ட சுதந்திர வாசகங்கள்
இன்னும் மறையவில்லையடா

ஆவணித் திங்கள் மேகங்களெல்லாம்
உனக்காக அழுகின்றதடா
நீ மறைந்ததை எண்ணி இந்தக்
கடலலைகள் கூட இரைகின்றனடா
இயற்கை கூட உன் இறப்பால்
அழுகின்ற போது
நாம் மட்டும் எப்படியடா
உனைப்பிரிந்து வாழ முடியும்
நாட்கள் பல சென்றாலும் உன்
நினைவுகள் உறங்காதடா
ஆண்டுகள் பல கழிந்தாலும் உன்
வீர நடை அழியாதடா
இத்தனையும் படைத்து எம்மை
அருந்துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்ற
வீர மைந்தனே
உன் ஆத்ம சாந்திக்காக நாங்கள்
பிரார்த்திக்கின்றோமடா;

பெற்றோர், உடன்பிறந்தோர்,
உறவினர், நண்பர்கள்;

அம்பலவன் பொக்கணை:
முள்ளிவாய்க்கால் - முல்லைத்தீவு; (2044)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதுளம் பழங்கள்

விவசாய ஆராய்ச்சி நிலையத்தினரால் சிபார்சு செய்யப்பட்டதும், இரும்பாசினி, செயற்கை உரம் பாவியாது உற்பத்தி செய்யப்பட்ட முதல்தரமான பழங்கள் விற்பனைக்குண்டு:

மு. குலசேகரம்பிள்ளை
வேலணை 6

தொடர்பு கொள்ளவேண்டிய இடங்கள்

ஸ்ரீ லக்ஷ்மி அச்சகம்
87, கண்டி வீதி

221, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.

195, ஆட்டுப்பட்டித்தெரு,
கொழும்பு - 13

(2103)



## ஜேர்மன் - வாராந்தப் பயணம்

(சடவுச்சீட்டுத் தந்து ஒரு வாரத்தில் பயணத்தை மேற்கொள்ளலாம்)

* Papua New Guinea
(பப்போ நியூ கினியா) Labourer 1000 USD

* சிங்கப்பூர் தாதிமார்
(ஏழு வெற்றிடங்கள் மட்டுமே உண்டு)
பணிப்பெண்கள் — 4200/-

அவுஸ்திரேலியா குழுவின் பயண முடிவுகள் விரைவில் அறிவிக்கப்படும்.

குறிப்பு: எந்த நாட்டுக்கும் முற்பணம் அறவிடப்படமாட்டாது PASS PORT - BOND உடன் செய்து கொடுக்கப்படும்.

க. இந்திரலிங்கம் (சந்திரன்)

## நிரோஷன் என்ரபிறைஸ்

பருத்தித்துறை வீதி,
மயிலிட்டி காங்கேசன்துறை
(இ/8610) [T. B. வைத்தியசாலைக்கு முன்பாக]


## மின்திட்டங்களை அரசாங்கம் பொறுப்பேற்கும்

கொழும்பு, செப். 6

இந்த ஆண்டின் இறுதிக்குள் நாட்டில் உள்ள சகல மின் விநியோகத் திட்டங்களையும் பொறுப்பேற்கத் தேவையான சகல நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருவதாக எரிசக்தி மின்சக்தி அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்தார். (த-ஏ)

## ஊழியர் கவலை

பச்சிலைப்பள்ளி, செப். 6

கரைச்சி பிரதேசசபையின் கிளிநொச்சி தலைமையலுவலகத்தில் படையினர் முகாமிட்டுள்ளதால் கடந்த மூன்று வாரமாக ஊழியர்கள் தமது கடமைக்கு செல்ல முடிய என அறியப்படுகிறது.

இதனால் தமது ஆகஸ்ட் மாதசம்பளத்தைக் கூட எடுக்க முடியவில்லை என ஊழியர்கள் கவலை தெரிவித்தனர். (க-117)

# போக்குவரத்துக் கொடுப்பனவு ப.நோ.கூ. சங்கங்களுக்கு கிடைக்கும்

## முழுதாக வழங்க திணைக்களம் அனுமதி

யாழ்ப்பாணம், செப். 6

திருமலையில் இருந்து மா எடுத்து வந்த போக்குவரத்துக் கொடுப்பனவுகளை ஆரம்பத்தில் இருந்து வழங்க உணவுத் திணைக்கள தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது.

யாழ். மாவட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த ஜூன் மாதம் முதல் திருமலையில் இருந்து லொறிகள் மூலமாக மா எடுத்து வந்தன.

இதற்கான போக்குவரத்து கொடுப்பனவுகளை வழங்குவதில் இருந்து வந்த சிக்கல்கள் குறித்து யாழ். உணவுத் திணைக்கள அதிகாரி கொழும்பு அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தி வந்தார்.

இதைத் தொடர்ந்து ஜூன் மாதத்தில் இருந்து கொடுப்பனவுகளை வழங்கும்படி தலைமை அலுவலகம் உத்தரவு வழங்கியுள்ளது.

இவ்வுத்தரவு தொடர்பான கடிதம் கிடைத்ததும் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## அறிவித்தல்

பளை பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகள்விடமைப்பு நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக பிரதேச சபை விசேட ஆணையாளர் சு. கந்தசாமி அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் புலோப்பளை இயக்கச்சி முகமாலை உப அலுவலக எல்லைக்குள் புதிய கட்டடங்கள் (வீடு சலகூடம், எல்லைச்சுவர் போன்றவை) நிர்மாணிப் போரும் பழைய கட்டிடங்களை திருத்துவோரும் புதிய பாதைகளை உருவாக்குவதற்கும் பிரதேச சபையின் முன் அங்கீகாரம் பெற வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (க-117)

# புத்தளம், உடப்பில் ஸ்ரீ ஐயப்பன் ஆலயம்

புத்தளம் மாவட்ட உடப்பு கிராமத்தில் அழகிய சுவாமி ஐயப்பன் ஆலயம் ஒன்று உருவாகி வருகிறது.

பதினெட்டுப்படிகளுடன், கன்னி மூல கணபதி, மஞ்சமாதா, அம்மன் கறுப்பண்ண சுவாமி ஆகிய பரிவாரமூர்த்திகளும் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளன.

மேற்படி ஆலயத்திற்கு விஜயம் செய்த அகில இலங்கை சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீடாதிபதி கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸன் குருஸ்வாமி மேற்படி ஆலயத்திற்கான மூலமூர்த்தி ஐயப்பன் ஆகியவற்றை ஸ்ரீ சாஸ்தாபீடத்தால் இந்தியாவிலிருந்து தருவித்து அன்பளிப்பாக வழங்குவதாக உறுதியளித்தார்.

விக்கிரகங்களுக்கான மொத்தச் செலவு ரூபா பன்னிரண்டாயிரத்தையும்சாஸ்தாபீடம் வழங்கியுள்ளது. (த)

## இறுதிப் பரீட்சையில் சித்திபெற்ற

# 67 டாக்டர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், செப் 6

யாழ் பல்கலைக்கழகத்தின் வைத்தியபீடத்தில் இறுதிப் பரீட்சையில் சித்தி அடைந்த 67 பேருக்கு எதிர்வரும் 15ஆம் திகதி முதல் நியமனம் வழங்கப்பட இருக்கிறது.

இந்நியமனங்களை வழங்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேபோன்ற இறுதிப் பரீட்சை நடந்த றுகுணு, பேராதனை பல்கலைக்கழக வைத்தியபீட மாணவர்களுக்கும் —

இறுதிப் பரீட்சை நடக்காத கொழும்புபல்கலைக்கழக இறுதியாண்டு வைத்திய பீட மாணவர்களுக்கும் — இந்நியமனம் வழங்கப்பட இருப்பதாக அறியவருகிறது. (இ-3)


## ஞானக்கதிர்

அன்பு - அறநெறி - ஆன்மீகம்

மூன்றுவது இதழ் இப்போது அமோகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது!

- ★ நல்லூர் கந்தனின்நான்கு வர்ண அழகிய அட்டைப் படம்.
- ★ வேதத்தில் விஞ்ஞானம்;
- ★ வாரியார் வாய்மொழி;
- ★ உபநிடதங்கள் பற்றிய அறிமுகம்;
- ★ திருமகள் திருவருள் பெற...
- ★ நல்ல காலம் பற்றி (ஜோதிடம்)
- ★ பிள்ளையார் தீர்ப்பு, கந்தன்கருணை(சமயக்கதைகள்)
- ★ மாவிட்டபுரம், மருதடி, சுதுமலை அம்மன் கோவில்கள் பற்றிய கட்டுரைகள்;

மற்றும் பல...

மாதந்தோறும் மலரும் இந்த சமய ஞானக் களஞ்சியம்;

இன்றே வாங்குங்கள்;
உதயன் விநியோக முகவர்களிடம் கிடைக்கும்;
விலை ரூபா 5 மட்டுமே;



## சர்வமய குழந்தை நோய்த்தடுப்பு இலட்சியத்தை அடைய உதவுங்கள்

# கொடிய சின்னமுத்து நோயிலிருந்து உங்கள் குழந்தையைக் காப்பாற்றுங்கள்!



தாய்மாரே, உங்கள் குழந்தைக்கு [illegible] அப்படியானால் [illegible] உங்கள் குழந்தையை [illegible] சின்னமுத்து நோயிலிருந்து [illegible] தடுப்பு மருந்தை [illegible]

### சின்னமுத்து பயங்கர விளைவுகளை ஏற்படுத்த வல்லது

சின்னமுத்து ஒரு சாதாரண, தீங்கு விளைவிக்காத நோய் எனப் பல பெற்றோர் நினைக்கிறார்கள். இந்தப் பிழையான எண்ணத்தின் காரணமாக அவர்கள் தமது குழந்தைகளுக்குத் தடுப்பு மருந்து கொடுப்பதில் அசட்டையாக இருந்துவிடுகிறார்கள். உண்மையில் சின்னமுத்து பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு கொடிய நோய்.


இந்த நோயினால் மூளைக்காய்ச்சல், கண் குருடாதல், நியூமோனியா வயிற்றோட்டம், போஷாக்கின்மை முதலிய பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம். அதுமட்டுமல்ல, இதனால் உயிருக்குக்கூட ஆபத்து விளையலாம். எனவே அலட்சியமாக இருந்து உங்கள் அன்புச் செல்வத்தின் வாழ்வு பாழாவதற்கு இடமளிக்காதீர்கள். சின்னமுத்து நோய்க்கு எதிரான தடுப்பு மருந்தை உரிய வேளையில் கொடுத்து உங்கள் குழந்தையைக் காப்பாற்றுங்கள்.

### பொன்னான வாய்ப்பு

சின்னமுத்துத் தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொள்ளும் குழந்தைகளுக்குத் தங்கப் பஞ்சாயுதம் ஒன்றைப் பரிசாகப் பெறும் வாய்ப்புக் காத்திருக்கிறது. எனவே, உங்கள் குழந்தைக்கு இன்னமும் சின்னமுத்துத் தடுப்பு மருந்தைக் கொடுக்கவில்லையானால் இந்தப் பொன்னான வாய்ப்பைப் பயன்படுத்துங்கள்.

### தகைமை

பின்வரும் இரு பிரிவினரான குழந்தைகள் பஞ்சாயுதப் பரிசைப் பெறத் தகுதியுடையவராவர்.



1. 1989 ஜூலை 30க்கும் முன்னர் சின்னமுத்து நோய்க்கு எதிரான தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொண்ட 15 மாதங்களுக்குட்பட்ட குழந்தைகள்
2. 1989 ஜூலை 30க்கும் செப்டெம்பர் 10க்கும் இடைப்பட்ட காலத்தில் சின்னமுத்துத் தடுப்பு மருந்தைப் பெறும் 15 மாதங்களுக்குட்பட்ட குழந்தைகள்

இந்தக் குழந்தைகளின் தாய்மார் குழந்தைக்குச் சின்னமுத்துத் தடுப்பு மருந்து செலுத்தப்பட்டதும் அல்லது தடுப்பு மருந்து செலுத்தப்பட்டதற்கான அத்தாட்சியாகக் குழந்தையின் பொதுவான தடுப்பு மருந்தேற்றல் அட்டையைக் காட்டி 'சின்னமுத்துத் தடுப்பு மருந்து அட்டை' ஒன்றைச் சிகிச்சை நிலையத்தில் கேட்டு வாங்கிக்கொள்ள வேண்டும். பின்னர், இந்த அட்டையில் குழந்தையின் பெயர் முகவரி போன்ற விபரங்களை எழுதி அதனை அங்கேயே திருப்பிக் கொடுக்க வேண்டும்.

உங்கள் குழந்தைக்கும் தங்கப் பஞ்சாயுதம் ஒன்றைப் பெறும் வாய்ப்பு கிட்டலாம்.

அதைவிட முக்கியமாக, உங்கள் குழந்தையைப் பயங்கரமான நோய் ஒன்றிலிருந்து காப்பாற்றிவிட்ட மனநிம்மதி உங்களுக்குக் கிடைக்கும்.

இன்றே உங்கள் குழந்தைக்குத் தடுப்பு மருந்தைக் கொடுங்கள்.
தாமதித்தால் தவிக்க நேரிடும்.

சுகாதார, மகளிர் விவகார அமைச்சு
யுனிசெப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அளவெட்டி வடக்கு, சாத்தனுர் கலட்டி
அருள் மிகு மாரியம்மன் ஆலய
அதிஷ்டலாபச் சீட்டிழுப்பின்
அதிஷ்டசாலிகள் 14 பேரின் இலக்கங்கள்

1. 6538 2. 542 3. 90 4. 6779
5. 502 6. 2972 7. 7827 8. 7388
9. 3341 10. 1420 11. 6938 12. 3367
13. 6106 14. 4997

இங்ஙனம்:
ஆலய தொண்டர் சபையினர்
(1924)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. கனகசபை துரைராசா (குணம்)
(பிரபல வர்த்தகர்)

தோற்றம்: 31-10-1928 மறைவு: 16-9-1988

எங்கள் குடும்ப தீபமே! ஆண்டொன்று சென்றது அய்யா: தேறமுடியவில்லை உமது பிரிவை: அன்புத் தெய்வமே! உழைப்பின் உத்தமனே! எங்கள் உயிர்த் துடிப்பு உள்ளவரை உங்கள் நினைவு நீங்காது அய்யா: இன்னல் பட்டும் இன்முகம் காட்டியும் கஷ்டம் தெரியாமல் எங்களை ஆளாக்கி விட்டீர்கள். எத்தனை எத்தனை எண்ணங்கள்! அத்தனையும் கைகூடும் வேளையில் எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டதேனோ?

மறையா உருவமாக எங்கள் முன் நிற்கும் உங்கள் பாதங்களில் கண்ணீர்ப் புஷ்பங்களால் அர்ச்சிக்கிறோம்:

பிரிவால் துயருறும்
மனைவி, மைந்தர்கள், மைத்துனர்

மாகியம்பதி,
சண்டிலிப்பாய்: (1926)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
குஞ்சுப்பிள்ளை வேலுப்பிள்ளை
(அல்வாய் வடக்கு)

தோற்றம்: 12 - 11 - 1901 மறைவு: 19 - 08 - 1988

அன்பின் இருப்பிடமாய், பண்பின் உறைவிடமாய் எங்கள் இல்லத்தில் தெய்வமாய் விளங்கி எங்கள் நல் வாழ்விற்கு தாயும் தந்தையுமாக வழிகாட்டியாய் நின்று ஆட்கொண்ட அன்னையே! ஓராண்டு சென்றாலும் உங்கள் பிரிவு என்றும் அலைவது

உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திரு. R. N. குணநாயகம், திருமதி க. திவ்வியமணி,
திரு. வே. ஈஸ்வரநாதன், திரு. வே. மகாதேவன்
மற்றும் மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
பூட்டப்பிள்ளைகள்.

அல்வாய் வடக்கு,
அல்வாய். [1858]

# விளையாட்டு அரங்கு

## அண்ணா விளையாட்டுக் கழகம் முதலிடம்

யாழ்ப்பாணம், செப். 6
பூநகரியில் இம்மாதம் முதலாந் திகதி நடைபெற்ற 10 கிலோ மீட்டர் தூர சைக்கிள் ஓட்டப் போட்டியில் தம்பிராய் அண்ணா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த த. சதீசன் முதலாம் இடத்தையும் வளர்மதி விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த இ. ரமேஸ் இரண்டாம் இடத்தையும் அதே கழகத்தைச் சேர்ந்த ப. சுரேஸ்லிங்கம் மூன்றும் இடத்தையும் பெற்றனர்; ஏழு பேருக்கு ஆறுதல் பரிசுகள் வழங்கப்பட்டன:

பூநகரி வளர்மதி விளையாட்டுக்கழகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இப் போட்டியில் சுமார் 30 போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்:

# முறைமாற்றுத் திட்டத்தில் டாக்டர்கள் நியமனம்

கொழும்பு, செப் 6கள் —
கொழும்பு, வடகொழும்பு வைத்திய பீடங்களின் இறுதியாண்டு மாணவர்களுக்கும் யாழ்ப்பாணம், றுகுணு, பேராதனைப் பல்கலைக்கழக வைத்தியபீடங்களில் டாக்டர் பட்டம் பெற்றவர்களுக்கும் அரசு மருத்துவ மனைகளில் முறைமாற்றுத் திட்டத்தின் கீழ் இம்மாதம் 15ஆம் திகதி முதல் நியமனம் வழங்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

மூன்றுமாத முறைமாற்றுச் சுற்று முறையின் கீழேயே இவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படும்.

யாழ்ப்பாணம், பேராதனை, றுகுணு பல்கலைக்கழகங்களில் மருத்துவப்பட்டம் பெற்றவர் வெளிநாடுகளில் டாக்டர்கள் பட்டம் பெற்றவர்கள் —

கொழும்பு, வடகொழும்பு வைத்தியக்கல்லூரிகளில் செய்கைமுறைப் பயிற்சியை முடித்துக்கொண்ட, இறுதிப் பரீட்சைக்காகக் காத்துநிற்கும் இறுதியாண்டு வைத்திய மாணவர்கள் —

மருத்துவ இறுதியாண்டுப் பரீட்சை எழுதிச் சித்தியடையாத மாணவர்கள்—

ஆகியோர் இந்த நியமனங்களைப்பெற விண்ணப்பிக்கத் தகைமையுள்ளவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது: (த-எ)

## திருக்குடும்ப கன்னியர் மடம்
## அபி. சபை ஆண்டறிக்கை

யாழ்ப்பாணம், செப் 6
யாழ். திருக்குடும்ப கன்னியர் மட அபிவிருத்திச் சங்கம் தனது நிதி மூலம் ஆசிரியர் ஒருவரையும் நூலகப் பொறுப்பாளரையும் சேவைக்கு அமர்த்தியுள்ளது.

அத்துடன் பாடசாலைக்கு வேண்டிய முக்கிய பொருள்களையும் வாங்குவதில் உதவியுள்ளது.

பிரஸ்தாப பாடசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளர் திரு. ச. மா. சேதுகாவலரினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜீ. இ. ஈ. சாதாரணதரம், உயர்தரம் ஆகிய பரீட்சைகளில் பாடசாலை மாணவிகள் திறமையுடன் தேறினர் என்றும் —

மேலும் தமிழ்த்தின, ஆங்கிலத்தினப் போட்டிகளிலும் சாரணிய நிகழ்ச்சிகளிலும் விளையாட்டுப் போட்டிகள் என்பனவற்றிலும் பல சாதனைகளைப் புரிந்தார்கள் என்றும் — குறிப்பிட்டுப் பாராட்டப்பட்டுள்ளது (த-9)

## சோளச்செய்கை ஊக்குவிப்பு

நாடு முழுவதும் சோளப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்க விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது:

சோளச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு கடன் வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று விவசாயத்துறை துணை அமைச்சர் விஜயரத்தின பண்டா தெரிவித்தார்.

சோளச்செய்கை விவசாயிகளின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு புதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (த)

# சிற்பி விசுவின் படைப்புகள்
## யாழ். பல்கலைக்கழகத்தில் 3 தினங்களுக்குக் கண்காட்சி

இம் மாதம் 8, 9, 10 ஆம் திகதிகளில் (8, 9, 10 - 09 - 1989) யாழ் பல்கலைக்கழகத்தில் சிறபக்கண்காட்சியொன்று நடைபெறவுள்ளது.

ஐம்பதுகளின் பிற்பகுதியில் யாழ். மாநகர சபையில் ஹென்றிமூர் என்பவருடைய வெண்கலச் சிலைகளின் கண்காட்சியொன்று நடைபெற்றது: யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை ஒரு தமிழ் மகனுடைய படைப்பென்று சொல்லக்கூடிய முதலாவது சிற்பக்கண்காட்சி இதுஎன்று சொல்லலாம்.

இலங்கைத் தமிழ் மக்கள் நுண்கலைத் துறையில் (Fine Arts) மிகப் பின் தங்கியுள்ளார்கள் நுண்கலைகளில் எதை எடுத்துக் கொண்டாலும் நல்ல ஆரோக்கியமான நிலையுண்டு என்று சொல்வது கஷ்டமாக இருக்கிறது. சிற்பக்கலையைப் பொறுத்தவரை நிலைமை மோசம் என்றே சொல்ல வேண்டும்; சிற்பத்தோடு தொடர்புடைய ஓவியத்தின் நிலையும் அவ்வாறே;

இக் கண்காட்சியில் வைக்கப்படவிருக்கும் சிற்பங்களைச் செதுக்கியவர் சிற்பி விசுவலிங்கம் அவர்கள் ஆவார், மிகச் சிறிய உருவத்தினர். ஆனல் அவரின் கலைத்திறமை விசுவரூபங் கொண்டுள்ளது; எளிமையும், கூரிய கலைக்கண் நோக்கும், திறமையும் கொண்ட ஒரு சிற்பக் கலைஞர் என அவரைப்பற்றிச் சுருக்கமாகச் சொல்லலாம்; இலங்கையின் புகழ் பெற்ற ஓவியக் கலைஞர்களாகிய ஜோர்ஜ் கீற்ஸ், டேவிற், ஹரிபீரிஸ், டொனல்ட் ராமநாயக்கா போனறோருடன் நெருங்கிய தொடர்பும நட்புங் கொண்ட இவர் சிங்கள மக்களால் நன்கு அறியப்பட்டவர்; ஆனல் கலைஞன் என்ற வகையில் இவரை அறிந்த தமிழ் மக்களின எண்ணிக்கை குறைவு ஓவியர் மார்க்கு இவரைத் தற்செயலாகச் சந்திக்க நேர்ந்தது; இதன் பலன் யாழ் பல்கலைக்கழக அறிமுகம்; அதன் முடிவு இந்தக் கண்காட்சி, இதற்காக ஓவியர் மார்க்குவிற்கும் யாழ் பல்கலைக்கழகத்திற்கும் யாழ் மக்கள் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளார்கள்:

சிற்பி விசுவலிங்கம் இதுவரை பெரியதும் சிறியதுமான ஐயாயிரம் சிற்பங்களைச் செதுக்கியுள்ளார், அவைகளின் மிகப் பெரும் பகுதியைச் சிங்கள மக்களே வாங்கியுள்ளனர். மிகச் சிறு தொகையையே யாழ் மக்கள் வாங்கியுள்ளதாக அறிய முடிகிறது விசுவலிங்கம் அவர்களின் நல்ல படைப்புகளிற் பல பேராசிரியர் குரூஸ், பேராசிரியர் அல்பே போன்றோரிடம் உள்ளன.

நமது பார்வை வேறு; கலைஞர்களின் பார்வை வேறு அவர்கள் தனிப் பிறவிகள். [illegible] முக்கிய [illegible] உணர்வு வெளிப்பா[illegible] உணர்வை வெளிக்கொணர்வதற்காகக் கலைஞன் சில சிதைவுகளைச் செய்து விடுகிறான். அளவுப் பிரமாணங்களை அவன் கவனிப்பதில்லை நீட்டல், குறுக்கல், திரிதல் போன்ற விகாரங்களைச் செய்து விடுகிறான்; புறக்கண்ணுக்குத் தெரிகின்றபடி உள்ளதை உள்ள உள்ளபடி செதுக்குவதைச் சிற்பி விரும்புவதில்லை; ஓவியனும் அவ்வாறே கவிஞன் கூட அப்படித்தான் இதை நாம் புரிந்து கொண்டால்தான் விசுவின் சிற்பங்களை ரசிக்க முடியும் சிற்பி விசு தமது படைப்புக்களை ஓரளவு தான் நவீனமயப்படுத்தியுள்ளார்: மனத்தால் மாத்திரம் உணரக்கூடிய பண்புத் தன்மையை (Abstract) தமது படைப்புக்களில் அவர் அதிகம் திணிக்கவில்லை. அதனால் சாதாரண மக்களும் விசுவின் படைப்புக்களை ரசிக்க முடியும்:

— மான்

## புதிய தேர்

மண்டைதீவு செப். 6
மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலயத்திற்கு பல லட்சம் ரூபா செலவில் புதிய சித்திரத்தேர் ஒன்று அமைக்கப்பட விருக்கின்றது

இதற்கான தேர்த்திருப்பணிச் சபை ஒன்று ஓய்வு பெற்ற அதிபர் திரு. க. மாணிக்கலிங்கம் தலைமையில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது: (க - 88)

## கூட்டுறவு ஊழியருக்கும் காப்புறுதி

கொழும்பு, செப் 6
கூட்டுறவுத் துறை ஊழியருக்கும் காப்புறுதித் திட்டம் ஒன்று கொண்டு வரப்பட உள்ளது;

1990 ஆம் ஆண்டு ஜனவரி முதல் இத்திட்டம் அமுலுக்கு வரும் என்று கூட்டுறவு விவசாய அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்: (த-எ)

பத்திரிகை விநியோக ஆட்கள் தேவை

உதயன், சஞ்சீவி பத்திரிகைகளை விநியோகிப்பதற்கு ஆட்கள் தேவை. மோட்டார் சைக்கிள் ஓட்டக் கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

● அலுவலக நேரங்களில் நேரில் வரவும்

முகாமையாளர் (ஆளணி, நிர்வாகம்)
உதயன் பணிமனை
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தரமான கலர்ப்படப் பிரதிகள்

அதி குறைந்த கட்டணத்தில்...
மிகக் குறுகிய காலத்தில்...

கலர்ப்படச் சுருள்
கழுவுதல்
முற்றிலும் இலவசம்

நவீன கம்பியூட்டர்
இயந்திரத்தில்
பிரதி செய்தல்
3 முதல் 5 நாட்களில்
விநியோகம்



ஷப்ருவை நாடுங்கள்:

ஷப்ரு
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 22073

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ★ தோல்வியைத் தவிர்க்கும் முயற்சியாக

# ஆப்கன் கெரில்லாத் தளபதிகளிடம் ஆயுதங்களை நேரடியாக வழங்க அமெ.-பாகிஸ்தான் முடிவு!

### போராளிகளிடையேயான மோதலை நிறுத்தவும் நடவடிக்கை

வாஷிங்டன், செப். 5

ஆப்கனிஸ்தானில் போர்க்களத்தில் நின்று செயல்படும் கெரில்லாத் தளபதிகளுக்கு நேரடியாக ஆயுதங்களை வழங்குவது என்று அமெரிக்காவும் பாகிஸ்தானும் கூட்டாக முடிவு செய்துள்ளன.

அமெரிக்க ராஜதந்திர மற்றும் போராளி வட்டாரங்களை ஆதாரம் காட்டி வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை இத்தகவலை வெளியிட்டுள்ளது.

காபூல் அரசுக்கு எதிரான யுத்தத்தில் கெரில்லாக்கள் தோல்வி கண்டு வருவதைத் தடுக்கவே இரண்டு நாடுகளும் இம்முடிவை எடுத்துள்ளன.

இதனைத் தொடர்ந்து பாகிஸ்தான், பெஷாவரில் தலைமையகத்தைக் கொண்டுள்ள ஏழு கெரில்லா அமைப்புக்களின் தலைவர்களிடம் ஆயுதங்களும் நிதி உதவியும் இரு நாடுகளாலும் நேரடியாக வழங்கப்படமாட்டாது.

இதுவரை காலமும் ஆயுத, நிதி உதவிகள் பாகிஸ்தானில் வைத்தே வழங்கப்பட்டன. ஆயுதங்கள் பின்னர் கெரில்லாக்களுக்கு வழங்கப்பட்டு வந்தன. புதிய திட்டப்படி ஆயுதங்களை அமெரிக்க, பாகிஸ்தான் அதிகாரிகள் ஆப்கனுக்குள் கொண்டு சென்று யுத்த களத்தில் நின்று போராடும் கெரில்லாக்களின் தளபதிகளுக்கு நேரடியாகக் கையளிப்பார்கள்.

கெரில்லா அமைப்புக்கள் தங்களின் உட்கட்சி மோதலுக்கு ஆயுதங்களைப் பயன்படுத்தி வருவதைத் தவிர்க்கவே இந்த நடவடிக்கை என்று தெரிவிக்கப்படுகிறது.

## விரத முடிவில் உயிர் நீத்த பெண் துறவி

பதராந்தசம், செப். 5

24 வயதான பெண் ஜெயின் துறவி ஸ்ரீ புண்ய பிரபாஜி சதர்மஸ்ய விரத இறுதி நாளன்று உயிர் நீத்தார்.

தமிழ் நாட்டில் உத்திரமேரூரில் கடந்த வியாழன் இச்சம்பவம் இடம்பெற்றது.

நீரை மட்டுமே பருகிக் கொண்டு சதர்மஸ்ய விரதம் அனுஷ்டித்து வந்த 43 ஆவது நாள் இவர் மறைந்தார். (எ)

## ஜனாதிபதி புஷ்ஷுக்கு கொலைப் பயமுறுத்தல்

லொஸ்ஏஞ்சல்ஸ், செப் 5

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் உப ஜனாதிபதி டான் குயில் ஆகியோரைக் கொலை செய்யப் போவதாகப் பயமுறுத்திய ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

லொஸ்ஏஞ்சல்ஸ் சர்வதேச விமான நிலையத்தில் உள்ள தொலைபேசி அறையில் இருந்து ஒரு நபர் அவசர தொலைபேசி இலக்கத்தைப் பாவித்து கொலைப்பயமுறுத்தலை விடுத்தார்.

தொலைபேசி இயக்குனராக அன்று பணியாற்றிய சார்ஜண்ட் டில் ஜித் சிங் அவரைக் கைது செய்து அமெரிக்க இரகசிய பொலிஸ் அதிகாரிகளிடம் ஒப்படைத்தார்.



ஜோர்ஜ் புஷ்

## காபூலில் அதிகரித்து வரும் அமெரிக்கஎதிர்ப்பு உணர்ச்சி

காபூல் செப். 5

ஆப்கனிஸ்தானில் அமெரிக்கா மீதான எதிர்ப்பு வலுத்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

கெரில்லாக்கள் தொடர்ந்து தாக்குதல் நடத்த ஆயுத உதவிகளை அமெரிக்கா தொடர்ந்து வழங்குவது குறித்து காபூல் மக்கள் பகிரங்கமாக பேசத் தலைப்பட்டிருப்பதாக ஏஜன்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

சோவியத் படைகள் வெளியேறிய பின்னரும் அமெரிக்கா கொரில்லா யுத்தத்தை தொடர்ந்து நடத்த விரும்புவதை காபூல் மக்கள் கண்டிக்கின்றனர் என்று அச்செய்திகள் தெரிவிக்கின்றன. (எ)

## 'அந்த நாள் ஞாபகம்'

லண்டன் செப் 5

50 ஆண்டுகளுக்கு முன்னர் ... 3-9-1939 இல் இரண்டாம் உலக மகா யுத்தத்தில் பிரிட்டனும் குதித்தது.

இதை நினைவு படுத்தும் முகமாக சர்வாதிகாரி ஹிட்லர் நெவில் சாம்பர்லின் 13 வயதான இளவரசி எலிஸபத் ஆகியோர் 50 ஆண்டுகளுக்கு முன் நிகழ்த்திய உரைகள் லண்டன் பி. பி. சி வானொலியில் ஒலிபரப்பப்பட்டன.

ஹிட்லர் தனது உரையில் செப்டம்பர் முதலாம் திகதி போலந்தின் மீது ஜேர்மன் நடத்திய தாக்குதலுக்கு நியாயம் கற்பித்தார். இந்த யுத்தத்தில் 5 கோடி 50 இலட்சம் பேர் வரையில் மரணமடைந்தனர்.

பிரிட்டிஷ் பிரதமராக இருந்த நெவில் சாம்பர்லின் தனது உரையில் ஜேர்மனியுடன் யுத்தத்தில் ஈடுபடுவதாக தெரிவித்தார்.

இப்போதைய இரண்டாவது எலிஸபத் மகாராணி 1939இல் 13 வயதாக இருந்தபோது நிகழ்த்திய உரையில் யுத்தத்தில் சிக்குண்ட குழந்தைகள் பற்றி கவலை வெளியிட்டார். (எ)

## சார்க் வெளியுறவு அமைச்சர் மாநாடு நவம்பரில் நடக்குமா?

### நட்வர்சிங் பெல்கிறேடில் தகவல்

பெல்கிறேட் செப் 5

ஒத்தி வைக்கப்பட்ட சார்க் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு நவம்பரில் இஸ்லாமபாத்தில் நடைபெற கூடிய வாய்ப்பு இருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

பெல்கிறேட்டில் இலங்கை வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின இணை அமைச்சர் நட்வர் சிங்குடன் பேசினார்.

அதன் பின்னர் திரு. நட்வர்சிங் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் இத்தகவலை வெளியிட்டார்.

நவம்பரில் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டை நடத்தலாம் என்று பொதுவான உடன்பாடு காணப்பட்டுள்ளது.

இலங்கை நிலைமை, இருதரப்பு உறவுகள் ஆகியவை பற்றி இலங்கை அமைச்சருடன் பேசினேன்.

இப்படி நட்வர்சிங் சொன்னார்.

# பதவி விலக ராஜீவுக்கு ஆலோசனை கூறும்படி ஜனாதிபதிக்கு விண்ணப்பம்

### வி. பி. சிங் கடிதம்

புதுடில்லி, செப். 5

பிரதமர் பதவியை ராஜினாமா செய்யும்படி ராஜீவ் காந்திக்கு ஆலோசனை கூறுங்கள்!

ஜனாதிபதி வெங்கடராமனுக்கு ஜனதா தள் தலைவரும் தேசிய முன்னணியின் அமைப்பாளருமான திரு. வி. பி. சிங் முன் கண்டவாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.



வெங்கட்ராமன்

ஜனாதிபதிக்கு இது சம்பந்தமாக திரு. வி. பி. சிங் கடந்த ஞாயிறு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார். அந்தக் கடிதத்திலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

போபோர்ஸ் பீரங்கி பேர ஊழல் தொடர்பாக பிரதமர் காந்திமீது முன்னாள் இராணுவத் தளபதி ஜே. சுந்தர்ஜி தெரிவித்த குற்றச்சாட்டைத் தொடர்ந்தே திரு சிங் ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதினார்.

போபோர்ஸ் பேர யோசனை ரத்துச் செய்யும்படி தான் கேட்டதாகவும் அதற்காக பிரதமர் தன்மீது கோபம் கொண்டதாகவும் ஜெனரல் சுந்தர்ஜி கூறியிருந்தார்.

ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில்—

''நீங்கள் ஆயுதப்படைகளின் பிரதம தளகர்த்தா, நாட்டைப் பாதுகாக்கும் ஆயுதப்படைகளின் திறமை இன்று பாதிக்கப்பட்டுள்ளது.

''நீங்கள் அரசமைப்பின் பாதுகாவலன். இன்று நாட்டின் ஜனநாயக அமைப்பே பாதிக்கப்பட்டிருக்கிறது.

''ஆகவே தேசிய நலன்களின் ஒரு பாதுகாவலர் என்ற முறையில் பிரதமர் பதவியில் இருந்து விலகும்படி ராஜீவ் காந்திக்கு அரசமைப்பு வழங்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆலோசனை கூறுங்கள்—,' என்று வி. பி. சிங் கூறியிருக்கிறார். (எ)

## நிக்கரகுவா அதிபர் தேர்தல்; பெண் வேட்பாளரும் போட்டி!

மனகுவா, செப். 5

நிக்கரகுவாவின் அடுத்த ஆண்டு பெப்ரவரியில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகள் 50 வயதான திருமதி வயலற்று சமாரோ பரியோஸ் என்பவரை தங்கள் வேட்பாளராக நியமிக்க உள்ளன.

1979 இல் அதிபர் சோமோஸாவை பதவி கவிழ்த்த புரட்சி ஆரம்பமாவதற்கு காரணமாக பெட்ரோ ஜோக்கின் சாமோரோவின் கொலை அமைந்தது. அந்த சாமோரோவின் விதவைதான் இப்போது எதிர்க்கட்சி வேட்பாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தற்போதைய அதிபர் டானியல் ஒற்றேகாவும் தேர்தலில் போட்டி இடுகிறார்.

### கண்டனம்

புதுடில்லி, செப். 5

திபெத்தின் தலைவராக, அண்மையில் மரணமடைந்த பஞ்சன் லாமாவின் இடத்திற்கு புதிய ஒருவரை நியமிக்க சீன அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதை புதுடில்லியில் உள்ள ஆத்மீகத் தலைவர் தலாய் லாமா பலமாகக் கண்டித்துள்ளார். (எ)

## உலக நாடுகளில் வாழும் இந்தியர் வேண்டுகோள்!

நியூயோர்க் செப். 5

இந்தியாவைத் தவிர்ந்த வெளிநாடுகளில் வாழும் இந்தியப் பிரஜைகள் தங்களுக்கு எதிராக பிஜி, மலேசியா, கனடா, தென் ஆபிரிக்கா, ட்ரினிடாட், டொபாகோ, மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் இடம்பெறும் அடக்கு முறைகளில் இருந்து பாதுகாக்கும்படி ஐ நாவைக் கேட்டுள்ளனர்.

இந்திய வம்சாவளியினரின் முதலாவது உச்சி மநாடு கடந்த சனிக்கிழமை நியூயோர்க்கில் முடிவடைந்தது.

அந்த மாநாட்டில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

பல நாடுகளில் இந்தியர்களுக்கு இழைக்கப்படும் அநீதி பற்றி தெரிந்து கொள்ள விசேட குழு ஒன்று மாநாட்டின் நியமிக்கப்பட்டுள்ளது. [எ]

### தேடுதல் பணி

ரியோடிஜெனரோ, செப் 5

பிரேஸில் நாட்டின் அமேஸன் காடுகளில் 50 பயணிகளுடன் காணமற்போன விமானம் ஒன்றைத் தேடும் முயற்சியில் முப்படைகளும் ஈடுபட்டுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது. (எ)

## பாக். அமைச்சர் மீது கொலைக் குற்றச்சாட்டு

இஸ்லாமபாத் செப் 5

பெனஸிர் அமைச்சரவையில் உள்ள தொழில்துறை மனித சக்தி அமைச்சர் மலிக்முக்தார் அவானின் மீது கொலைக்குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

முன்டான் உப தேர்தலின் போது இரண்டு மாணவர் கொலையுண்ட சம்பவம் தொடர்பாக அமைச்சரைக் கைது செய்ய 'மப்டி' உடையில் பொலிஸார் இஸ்லாமபாத் விமான நிலையத்தில் காத்து இருந்தனர்.

ஆனால் அமைச்சர் அங்கு இறங்காது மீண்டும் விமானத்தில்சென்று கராச்சியில் இறங்கினார். (எ)

## மேற்கு வங்காள அரசும் கலைக்கப்படும் ஆபத்து?

### மத்திய அமைச்சர் எச்சரிக்கை

கல்கத்தா, செப் 5

மேற்கு வங்காளத்தில் ஜனாதிபதி ஆட்சியை ஏற்படுத்தும் நிலைமை இன்னும் நிலவுகிறது.

மத்திய இணை அமைச்சர் ஜி அஜபாஞ்ஜ முன்கண்டவாறு தெரிவித்தார்.

மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் அரசை கலைக்கக் கூடிய சூழ்நிலைதான் மேற்கு வங்காளத்தில் இன்று காணப்படுவதாகவும் அமைச்சர் சொன்னார். [எ]

## படைத் தளபதி பதவியில் இருந்துஜனாதிபதிராஜினமா

ஈரானின் ஆயுதப்படைகளின் தளபதிப் பதவியை ஜனாதிபதி அலி அக்பர் ரப்ஸஞ்சானி ராஜினாமா செய்துவிட்டார்.

அரசியல் விஷயங்களில் தீவிரமாக ஈடுபடவேண்டி இருப்பதால் ஆயுதப்படை தளபதி பதவியை வகிக்க முடியாதிருப்பதாக ரப்சஞ்சானி தெரிவித்தார் என தெஹ்ரான் வானொலிஅறிவித்தது.

ஆத்மீகத் தலைவர் அலி காமேனி ராஜினாமாவை ஏற்றுக்கொண்டார். (எ)

## தமிழகத்தில் ஜெனரல் சுந்தர்ஜி தி. மு. க. ஆதரவுடன் போட்டி?

### மத்திய அமைச்சர் தகவல்

ஹைதராபாத், செப் 5

இந்திய ராணுவத்தின் முன்னாள் தளபதி ஜெனரல் கிருஷ்ணசாமி சுந்தர்ஜி எம்.பியாகும் ஆசையில்தான் போபோர்ஸ் பேர ஊழல் சம்பந்தமாக பிரதமர் காந்தி மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்திருக்கிறார்.

மத்திய அமைச்சர் வெங்கலராவ் முன்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் தி. மு. க. ஆதரவுடன் ஜெனரல் சுந்தர்ஜியை எம். பியாக்கும் முயற்சியில் சில அரசியல் கட்சிகள் ஈடுபட்டுள்ளன.

தளபதி பதவியிடி இருந்து ஓய்வுபெற்ற பின்னர் தனக்கு அரசியல் பதவியை அரசதரும் என்று ஜெனரல் சுந்தர்ஜி எதிர் பார்த்தார் அது நடைபெறவில்லை.

இப்போது தனது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றவே ஜெனரல் சுந்தர்ஜி பிரதமர் மீது அவதூறு பரப்ப முன் வந்திருக்கிறார்.

இப்படி திரு. வெங்கலராவ் சொன்னார். (எ)

## ஸ்மிதா விருது!

பம்பாய், செப். 5

'மகாபாரதம்' தொடரில் திரௌபதியாக நடித்துவரும் ரூபா கங்குலிக்கு 1989 ஆம் ஆண்டிற்கான ஸ்மிதா பட்டில் விருது வழங்கப்பட்டுள்ளது.

தூரதர்ஷனில் ஒளிபரப்பப்பட்டு வரும் மகாபாரதத்தில் சிறப்பாக திரௌபதி வேடத்தில் நடித்ததற்காக இவ்விருது வழங்கப்படுகிறது. (எ)

# வீரப்பனை பதவி இறக்கிய 'பாரத்பந்த்' அறிக்கை; மீண்டும் அ.தி.மு.கவுக்குள் உருவாகும் நெருக்கடி!

சென்னை, செப். 5

கடந்த 30 ஆம் திகதி எதிர்க்கட்சிகள் நடத்திய 'பாரத் பந்த்' பற்றி முந்திரிக்கொட்டை போல முந்திக்கொண்டு திரு. வீரப்பன் விட்ட அறிக்கைதான் அ.தி.மு.க.வில் அவர் மூன்றும் இடத்திற்குத் தள்ளப்பட்டதற்கானகாரணம் என்று சென்னை அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

எதிர்க்கட்சிகள் நடத்திய 'பந்த்' தில் தி.மு.க. கடைப்பிடிக்கும் நிலைப் பார்த்தே அ.தி.மு.க தனது முடிவை அறிவிக்கும் என்று திரு. வீரப்பன் அறிக்கை விடுத்தார்.

இது ஜெயலலிதாவிற்குப் பிடிக்கவில்லை, உடனே அவர் மறுப்பு அறிக்கை ஒன்றை விடுத்தார்.

காங்கிரஸுடனுனகூட்டணியில் அ.தி.மு.க. இருக்கிறது. ஆகவே 'பாரத்பந்த்'தை எதிர்த்தே அ.தி.மு.க. செயல்படும் — என்று ஜெயலலிதா தமது அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

இதைத் தொடர்ந்தே இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன.



ஜெயலலிதா

என்றும் —

அதன் உச்சக் கட்டமாக, தான் இல்லாத சமயம் அறிக்கை விடும் அதிகாரம் கொண்ட இணைப் பொதுச் செயலாளர் பதவிக்கு மேலாக சிரேஷ்ட இணைப் பொதுச் செயலாளர் பதவி ஒன்றை உருவாக்கி அதற்கு திரு. எஸ். டி. சோமசுந்தரத்தை நியமித்திருக்கிறார்.

இதனால் இணைப் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து வீரப்பனை விலக்காமல் அவரின் அதிகாரத்தைப் பறித்த ஜெயலலிதாவின் சாமர்த்தியத்தை அவரது ஆதரவாளர்கள் புகழ்கின்றனர்.

எம். ஜி. ஆரின் அமைச்சரவையில் பணிபுரிந்து வந்த சமயம் திரு. எஸ். டி. சோமசுந்தரம் ஜெயலலிதாவைப் பலமாகக் கண்டித்து வந்தார். அந்த எதிர்ப்பே சோமசுந்தரத்தின் அமைச்சர் பதவியையும் பறித்தது.

அ. தி. மு. க வில் இருந்து வெளியேற்றப்பட்ட திரு. சோமசுந்தரம் 1984 இல் 'நமது கழகம்' என்ற அரசியல் கட்சியை ஆரம்பித்தார். ஆளுநராக இருந்த திரு. எஸ். எல். குரானாவிடம் எம். ஜி. ஆர் அரசு மீது நூறு ஊழல் குற்றச்சாட்டுக்களை சுமத்தும் மகஜர் ஒன்றையும் சமர்ப்பித்தார்.

1984 இல் அவரது ''நமது கழகம்'' கட்சி படுதோல்வி கண்டது. பின்னர் அவரது கட்சி அ. தி. மு. க வுடன் இணைந்தது அத்தோடு தலைமைப் பொதுச் செயலாளர் பதவியும் அவருக்குக் கிடைத்தது.

வீரப்பனுக்குப் பதில் சோமசுந்தரம் பதவி உயர்வு — போன்ற அதிர்ச்சிச் சம்பவங்கள் அ தி மு க வில் அடிக்கடி இடம்பெறலாம் என்றும் சென்னை வட்டாரங்கள் தெரிவித்தன.

எம். ஜி ஆரும் அ தி மு க. விலும் அமைச்சரவையிலும் அடிக்கடி திடீர் மாற்றங்களைச் செய்து வந்தார்.

அதே பாணியையே செல்வி ஜெயலலிதாவும் இப்போது கடைப்பிடிக்கத் தொடங்கி உள்ளார் என்பதை வீரப்பனின் பதவி இறக்கம் காட்டுவதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். (எ)


உ
சிவமயம்

## ★ திருமண அழைப்பிதழ் ★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுக்கில வருடம் ஆவணி மாதம் 22 ஆம் நாள் (07-09-1989) வியாழக்கிழமை காலை 9.00 மணி முதல் 10 மணி வரையில் வரும் துலா லக்கின சுப முகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் ★ சிவகுமார் ★ அவர்களுக்கும்

எமது கனிஷ்ட புத்திரி திருநிறை செல்வி ★ வித்தியகுமாரி ★ அவர்களுக்கும்

இறையருள் துணை கொண்டு மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெற பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதரராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு திருமதி குணசிங்கம், 'குகபவனம்' போக்கான வீதி, உடுப்பிட்டி.

திரு. திருமதி சிவக்கணபதிப்பிள்ளை டயித்தோலை, அச்சுவேலி.

இருவீட்டார் அழைப்பு

(2104)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது!

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்

★தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
நெக்கட்டிவ் [Processing] செய்தல் இலவசம்
★ விற்பனை வர்ண நிழற்படச் சுருள்கள்
Kodak Fuji Konic.
Tudor Fort B/W

பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

# உதயன்

06 : 09 : 1989 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்படப்பிரதிகள்
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள்
போட்டோ அல்பங்கள் இலவசம்
மேலதிக விபரங்களுக்கு

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வடமத்திய மாகாணத்தில்

## பாடசாலைகள் ஆரம்பம்; 60 வீத மாணவர் வந்தனர்

இரண்டு மாத கால இடைவெளியின் பின்னர் வடமத்திய மாகாணத்தில் உள்ள பாடசாலைகள் நேற்று முன்தினம் முதல் மீண்டும் திறக்கப்பட்டன என்று அறிவிக்கப்பட்டது:

60 சதவீதமான மாணவர்கள் பாடசாலைகளுக்குச் சென்றனர் என்றும் கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன;

இதேவேளை-

மேல்மாகாணம், சப்ரகமுவ மாகாணம் ஆகியவற்றிலுள்ள பாடசாலைகள் வருகிற 11ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகும் என்று மாகாண கல்விப் பணிப்பாளர்கள் தெரிவித்தனர்;

இராசகோபுர
அடிக்கல் நாட்டு விழா

காலம்:- 07 - 09 - 89 வியாழக்கிழமை காலை 6 49 மணி தொடக்கம் 8-35 மணி வரை உள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறும்:
இடம்:- சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலயம்.

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!!

தர்மகர்த்தா சபை:

(2105)

எமது புதிய வெளியீடு

✶ அர்ஜுன் ✶ சிதா ✶ ராதாரவி நடித்த
அண்ணனுக்கு ஜே
(பிரமிட் ஒரிஜினல்)

வீடியோ விமல்
117. மானிப்பாய் வீதி.
ஐந்து சந்தி யாழ்ப்பாணம். (1929)

### நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைத்தலும்



எட்வீனம்மா அல்பேட்

தோற்றம்:- 16 09-1946 மறைவு:- 31-08 - 1989

31-08-1989 இல் காலஞ்சென்ற எமது அன்பிற்குரிய எட்வினம்மா அல்பேட் அவர்களின் மரணச் செய்தி கேட்டு எமது துயரத்தில் பங்குகொண்டுஎம்மைத்தேற்றியவர்களுக்கும், அனுதாப செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும், மலர் வளையம் சாத்தியோருக்கும், ஈசன் ஸ்தாபனத்தாருக்கும் அண்ணா ச.ச. நிலையத்திற்கும், செராமிக் ஆட்சி ஸ்தாபனத்தாருக்கும் மின்சார உதவி வழங்கிய மக்ஸ்' ஸ்தாபன உரிமையாளர் மூபின் அவர்களுக்கும், நாவாந்துறை இளைஞர்கட்கும் மற்றும் ஏனைய வகையில் உதவி புரிந்த அனைவருக்கும் எமது உளம் கனிந்த ஆழமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்:

வீட்டுக்கிருத்தியங்கள் 06-09 89 (புதன்கிழமை) இன்று நண்பகல் 12-00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அனைவரும் இதில் கலந்து கொள்ளுமாறு விவாக கேட்டுக் கொள்கின்றோம்

நன்றி:

தனி அழைப்பு வழங்க முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம்;

இங்ஙனம்
கணவர், பிள்ளைகள், தாய், சகோதரர்கள்,
[S A.N., ஸ்தாபனம்] மைத்துனர், மைத்துனி.

"தந்தை இல்லம்"
பீச் ரோட்,
நாவாந்துறை வடக்கு,
யாழ்ப்பாணம். (1928)

## பிரேமாவின் கண்களைத் திறக்க--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
மீது தடை விதிக்கப்பட்டதை அவர் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்:

இவ்விடயங்களை விளக்கி ஜனநாயகத்தின் பேரில், இயற்கை நீதி, சமத்துவம், உண்மைநிலை ஆகியவற்றின் அடிப்படையில் முடிவுகளை மேற்கொள்ளும்படி கண்ணியத்துடன் அவர் கேட்டிருந்தார்.

**ரோஹணவின் கடிதம்**

"ஜே. வி. பி. ஒரு ஜனநாயக அரசியல் கட்சியாகும்; இன்றைய முதலாளித்துவ முறையைநீக்கி பொதுவுடமை அமைப்பை ஏற்படுத்த விரும்பும் இயக்கமாகும்.

ஜே வி. பியின் சோஷலிஸ நிகழ்ச்சித் திட்டத்தை மக்கள் தாமாக விரும்பி ஏற்றுக் கொள்ளும்வரை அதனை மக்கள் மீது திணிக்கும் எண்ணம் ஜே வி. பிக்குக் கிடையாது:

பெரும்பான்மை மக்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தை சிறுபான்மை மக்களின் ஆதரவுடன் கவிழ்க்கும் திட்டம், முயற்சி, எண்ணம் ஏதும் அதற்கு இல்லை என்பதையும் திட்டவட்டமாகக் கூற விரும்புகின்றேன்.

வன்முறையிலும் அதற்கு நம்பிக்கை இல்லை;

தமிழ் இனவாதம், சிங்கள இனவாதம் எதுவாக இருந்தாலும் இனவாதத்தை ஜே. வி. பி. எதிர்க்கிறது; இன வன்முறையையும் அது எப்போதும் எதிர்க்கும்;

தேசிய பிரச்சினை இனவாதம் பாழடிக்கும் என்றே ஜே வி. பி. கருதுகிறது;

இன ரீதியாக நாட்டைக் கூறுபோடுவது பிரச்சினைக்குத் தீர்வாகாது என ஜே. வி. பி கருதுவதால் நாட்டைக் கூறுபோடும் முயற்சியை அது எதிர்த்து வருகிறது:

ஒற்றையாட்சி அமைப்பு முறைக்கு அது எதிரானது அல்ல.

1983 ஜூலை வன்செயல்களுக்கும் ஜே வி.பிக்கும் எந்தத்தொடர்பும் இல்லை; நாட்டைக் கூறுபோடுமாறு ஜே.வி.பி குரல் எழுப்பவில்லை; தனிநாடு கோரிக்கைக்கு ஆதரவு அளிக்கவுமில்லை;

அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் ஜே.வி.பி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் தேடப்படுகிறார்கள்; வேட்டையாடப்படுகிறார்கள்; தடுப்புக் காவலில் வைக்கப்படுகிறார்கள்

அயல்நாடு ஒன்றுக்கு சட்ட விரோதமாகச் சென்று அங்கு நான் குடியேறவில்லை; அப்படியான எண்ணமும் எனக்கு இல்லை;

நாட்டின் நிலைமையை கண்ணியமான நிலையில்நோக்கி முடிவு எடுங்கள்;

அரசுக்கு ஐ.எஸ்.டி கொடுத்த தவறான அறிக்கையின் காரணமாகவே அரசு தவறாக வழிநடத்தப்பட்டிருக்கிறது என நான் நினைக்கின்றேன்;

அரசுக்குக் கொடுக்கப்பட்ட பின்வரும் தகவல்களை நான் முற்றாக மறுக்கிறேன்;

★ ஜே வி பி 1983 ஜூலை வன்செயல்களில் ஈடுபட்டது;

★ ஆயுதப்படையினரின் ஒரு பகுதியை அரசுக்கு எதிராகச் செயற்படும்படி ஜே வி.பி. தூண்டியது;

★ அரசுக்கு எதிரான வதந்திகளை ஜே வி.பிபரப்பியது;

★ அரசைக் கவிழ்க்க ஜே.வி.பி சூழ்ச்சி செய்தது:

★ நாட்டைக் கூறுபோடும் முயற்சிக்குஜே வி.பி இசைந்து செயற்பட்டது;

★ வடபகுதிப் பயங்கரவாதிகளுடன் ஜே: வி: பி தொடர்புகளை வைத்திருந்தது;

★ 1982 ஜனாதிபதி தேர்தலின்பின்னர்ஜே.வி.பி தனது போக்கை மாற்றிக் கொண்டது;

இத்தகைய மூடத்தனமான அறிக்கைகளை இனம் கண்டு உண்மையை தெரிந்து கொள்ளும் அரசியல் முதிர்ச்சி உங்களுக்கு இருக்கின்றது என நான் நம்புகின்றேன்.

ஜே. வி. பி: வெளிநாடுகள் எதனுடனும் இரகசியத் தொடர்பு வைத்திருக்கவில்லை: நிதி அல்லது வேறு உதவிகளை வெளிநாடுகளிடம் இருந்து ஜே: வி. பி. பெற்றுக் கொள்ளவுமில்லை;

ஜே: வி. பி. அறிவியல் சார்ந்த சோஷலிஸத் திட்டம் ஒன்றைக் கொண்ட ஓர் அமைப்பாகும்:

ஆகவே இவற்றைப் புரிந்து கொண்டு ஜே. வி. பி. மீது தவறாக விதிக்கப்பட்டிருக்கும் தடைகளை நீக்குமாறு கோருகின்றேன்;

தடுப்புக்காவலில்வைக்கப்பட்டிருக்கும் ஜே வி. பி. உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரை விடுவியுங்கள்;

என்னையும், ஜே: வி. பி; உறுப்பினர்களையும் கைது செய்து தடுப்புக் காவலில் வைக்கும்படி விடுக்கப்பட்டிருக்கும் உத்தரவை வாபஸ் பெறுங்கள்;

என்னையும், தோழர் உபதிஸ்ஸ கமநாயக்காவையும் பிடித்துக் கொலை செய்யும்படி அரசினால் அரசின் ஒரு பகுதிக்கு உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டிருந்தால் அதை நீக்குங்கள்;

—இவ்வாறு திரு: விஜேவீர தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தக் கடிதத்தின் பிரதியை அப்போதைய பிரதமர் என்ற முறையில் எனக்கும், ஏனைய சர்வதேச அமைப்புக்கள் பலவற்றிற்கும் திரு: ரோஹண விஜேவீர அனுப்பி வைத்திருந்தார்;

அந்தக் கடிதம் என் கண்களைத் திறக்கச் செய்தது;

கடிதம் எனக்குக் கிடைத்த நாள் முதல் ஜே: வி; பி, மீதான தடையை நீக்க நான் முயற்சித்து வந்திருக்கிறேன்;

தற்போதைய நிலையில், ஜனநாயக வழிக்கு அப்பால் நிற்கும் போராளிக் குழுக்கள் வன்முறையைக் கைவிட்டு ஜனநாயக வழிக்கு வரச் செய்யும் பொதுவான முயற்சியில் அனைத்துக் கட்சிகளும், குழுக்களும் ஈடுபட வேண்டியது அவசியமாகும்;

எனது அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டது; எனினும் அது மீண்டும் கொண்டு வரப்பட வேண்டியதற்கான சூழ்நிலை ஏன் ஏற்பட்டது என்பதை அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும்;

அவசரகாலச் சட்டம் வந்ததும் அசாதாரண சம்பவங்கள் நடப்பது தவிர்க்க முடியாதது ஆகிவிடுகிறது:

படையினர் பொதுமக்களைக் காப்பாற்றவே செயற்படுகிறார்கள்; அவர்களை அழிக்க முயற்சிப்பது துரதிர்ஷ்டவசமானது:

எல்லாப் போராளிக் குழுக்களிடமும் ஆயுதங்கள் இருக்கின்றன; எல்லாக் கட்சிக்காரர்களும் தற்பாதுகாப்பு என்ற பெயரில் ஆயுதங்களைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்;

ஆனால் ஆயுதம் இல்லாதவர்கள் அப்பாவிப் பொதுமக்களே; ஆகவே அவர்களைக் காப்பாற்ற வேண்டியது படையினர் பொறுப்பாகிறது;

எந்த இடர்வரினும் அந்தக் கடமையை பாதுகாப்புப் படையினர் தவறாது செய்வர் என்பது திண்ணம்;

—இப்படி ஜனாதிபதி கூறினார்; (உ)

## உதவிப் பொருள் வழங்கல்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
அவர்களே இந்திய அரசிடமிருந்து உதவிகளை முறையாகப் பெற்று வடக்கு - கிழக்கு மாகாண சபையிடம் ஒப்படைத்தனர்;

இன்று (புதன்கிழமை) திருகோணமலைத்துறைமுகத்திற்கு இந்தியாவின் நிவாரண உதவிகளைக் கொண்டுவரும் கப்பலில் இருந்து அப்பொருள்களை இறக்கும்போதும் இதே நடைமுறைதான் கடைப்பிடிக்கப்படும்;

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு நிவாரணப் பொருள்களை வழங்க அனுமதி கோரி இந்தியா செய்துகொண்ட விண்ணப்பத்தை இலங்கை அரசு அங்கீகரித்துவிட்டதா என்பது பற்றி என்னால் உறுதி செய்ய முடியாது.

— இப்படி இந்தியத் தூதரகப் பேச்சாளர் சொன்னார்;

ஒரு கோடி ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்களுடன் திருமலைத் துறைமுகத்திற்கு இந்தியக் கப்பல் ஒன்று வந்துகொண்டிருப்பதாகக் கிடைத்த செய்திகளைத் தொடர்ந்தே, இந்திய அமைதிப்படையின் உத்தரவு எதையும் ஏற்றுச் செயற்படக்கூடாது என்று வடக்கு - கிழக்கு அரச அதிபர்களுக்கு உள்நாட்டலுவல்கள் அமைச்சு உத்தரவிட்டிருப்பதாக கொழும்பு வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது;

இதேவேளை —

திருகோணமலைக்குக் கப்பல் மூலம் நிவாரண உதவிகளை அனுப்புவதை நிறுத்தி வைக்கும்படி புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதரகம், இந்திய அரசாங்கத்தைக் கேட்டுள்ளதாக மற்றொரு செய்தி தெரிவித்தது: (உ 9)

## வடக்கில் மின்சாரப்--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
இருப்பதால் அவற்றைப் பொறுப்பேற்க தாம் நடவடிக்கை எடுப்பதாகவும்—

சுன்னாகத்தில் உள்ள ஜெனரேட்டர்களுடன் இதில் ஒன்றையும் இயக்குவதன் மூலம் உடனடியாக யாழ் மாவட்ட மின்சாரப் பிரச்சினைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்—

பழுதடைந்த நிலையில் இருக்கும் ஜெனரேட்டரை உடனடியாகத் திருத்த ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் அமைச்சர் உறுதியளித்தார்.

**கிளிநொச்சி நிலைமை**

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் இயங்காதிருக்கும் இரண்டு ஜெனரேட்டர்களை இயக்குவதன் மூலம் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கும், கிளிநொச்சி நகரத்திற்கும் மின்சாரம் வழங்க முடியும் என்பதை அமைச்சருக்கு எம். பிக்கள் விளக்கி கூறினர்;

**திருமலை நிலைமை**

திருமலையில் உள்ள 'பிறிமா' மா ஆலையில் மேலதிக உள்ள 5 மெகாவாட் மின்சாரத்தை திருமலை நகருக்குக் கொடுப்பதன் மூலம் அப்பகுதியில் இருக்கும் 'மிட்சுபி' சிமெந்து தொழிற்சாலை கூட இயங்க முடியும் என்பதையும், திருமலை நகரத்தின் மின் தேவையையும் நிவர்த்தி செய்ய முடியும் என்பதையும் அமைச்சர்களுக்கு எம். பிக்கள் சுட்டிக்காட்டினர்.

இதனையடுத்து அமைச்சர் உடனடியாக பிறிமா ஆலையுடன் தொடர்பு கொண்டு மேலதிக மின்சாரத்தை உபயோகிப்பதற்கு அனுமதியைப் பெற்றுக் கொண்டதோடு இவ்வாரம் முதல் நகருக்கு மின்சாரம் வழங்கப்படும் என்று உறுதிமொழியும் வழங்கினார்; — இவ்வாறு அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது; (உ)

## பிரேமாவுடன்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
செய்திருப்பதாகவும் கூறப்பட்டது.

அனைத்துக் கட்சி மாநாட்டிற்கு முன்னர் எதிர்க்கட்சிகளை சந்தித்துப்பேச்சு நடத்த திரு: பிரேமதாஸா இணக்கம் தெரிவித்தால் அந்தச் சந்திப்பின் போது நாடாளுமன்றத்துக்குப் பொறுப்பான பிரதமரிடம் ஆட்சியை ஒப்படைக்கும் முறையை அமுலுக்குக் கொண்டு வருவது பற்றியும் [illegible] கருத்தை அறிவதற்கு எதிர்க்கட்சிகள் முயற்சிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது; (உ-1)

கொழும்பிலுள்ள தூதரகத்தில்

## இந்திய பரா துருப்புக்கள் தொடர்ந்து தங்கியிருக்கும்

கொழும்பு, செப். 6

இந்தியத் தூதரகத்தின் பாதுகாப்புக்கு கொழும்பு வந்துள்ள இந்திய பரா இராணுவத் துருப்புக்கள் தொடர்ந்து அங்கு தங்கியிருக்கும்;

இலங்கையின் பாதுகாப்பு நிலைமை மோசமடைந்து வருவதைத் தொடர்ந்தே இந்திய அரசு இந்த முடிவை எடுத்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது:

இந்தியத் தூதரகத்திற்கு இலங்கைப் படைகள் போதிய பாதுகாப்பை வழங்கும் என்று வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்தினா இந்திய அரசுக்கு உறுதியளித்தும்கூட, இந்தியத் துருப்புக்களை கொழும்புத் தூதரகத்தில் தொடர்ந்து வைத்திருக்க புதுடில்லி அரசு முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது; (ஒ எ)

### 2 அடையாளக் கார்ட்டுகள் கண்டெடுப்பு

கொடிகாமம் மடாகச்செல்லும் மினிபஸ்ஸில் தவறவிடப்பட்ட இரு அடையாளக் கார்ட்டுக்கள் யாழ் ஆஸ்பத்திரிவீதி வர்த்தகவங்கி ஊழியரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன;

363001203 V இலக்கமுள்ள பொலிகண்டியை வதிவிடமாகக்கொண்ட ஞானசெப்பின்னை ஞானமுத்து என்பவருடையது ஒன்று:

467611690 V இலக்கமுள்ள ஞானமணி ஞானசெப்பினை என்பவருடையது மற்றது;

இந்த இரண்டு அடையாளக்கார்ட்டுகளும் வர்த்தகவங்கியின் யாழ் கிளை முகாமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன; [இ]

### 20 சடலங்கள்

தென்இலங்கையில் கடந்த 24 மணித்தியாலங்களில் அரைகுறையாக எரிந்த 20 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன; (ஒ-1)

## மரண அறிவித்தல்கள்

### திரு. பரிபூரணம் முருகானந்தன்

பரிபூரணம் முருகானந்தன் காலமானார்; இவர் வல்லிபுரம் பரிபூரணம் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்), பரிபூரணம் தங்கம்மாவினது மகனும், பூரணாநந்தன் ஆசிரியர், நித்தியானந்தன் (முன்னாள் சுகாதாரப்பிரிவு F. A, A.K.C. கட்டார் பல்கலைக்கழகம்) விவேகானந்தன் C; T; B; மன்னார்) சிவானந்தன் (ஜேர்மனி), ஆனந்ததேவி, சர்வானந்தன் ஆகியோரின் சகோதரனும், உதயகுமார், சின்னமணி (ஆசிரியர்), விமல அருளேஸ்வரி, ஜெகதாம்பிகை, விமலேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்;

அன்னாரின் ஈமக்கிரியைகள் [6-9-89) புதன்கிழமை காலை 10-00 மணிக்கு ஆளங்கட்டை மயானத்தில் நடைபெறும்; இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்;

நெல்லியடி.
வதிரி,
கரவெட்டி.

தகவல்
வ. பரிபூரணம்
(2065)

### திரு. க. ஜெயரட்ணம்

அராலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், உடுவில் வாசியுமான திருவாளர் K; ஜெயரட்ணம் (கணக்காளர் கல்ஓயா சபை) வண்டனில் காலமானார். இவர் காலஞ்சென்ற ரேஸ் இன் அன்புக் கணவரும், யோகா, சந்திரன், Dr. பிரேமன், மோகினி ஆகியோரின் அன்புத் தந்தையும், றெக்ஸ் ராமநாதன், கிறிஸ்ரீன், சிவகுருநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்; அன்னாரின் அடக்க ஆராதனை 8-9-89 இல் இங்கிலாந்தில் நடைபெறும். 7-9-89 வியாழக்கிழமை காலை 9-30 மணிக்கு நன்றிசெலுத்தும் ஆராதனை அராலித் திருச்சபையில் நடைபெறும்; உற்றார், உறவினர் இத்தகவலை ஏற்று ஆராதனையில் பங்குபற்றுமாறு வேண்டுகிறேன்;

தகவல்:
ரி. சத்தியநாதன்

No. 3, The Covert
Clayton, New Castle-Underlyme
Staffordshire STS, 4 BL
U; K; (2108]

### ராஜலட்சுமி அம்மாள்

கேரளாலயப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற மீசாலை நடராஜக்குருக்கள் சோமஸ்கந்தஐயரின் அன்பு மனைவியுமாகிய ராஜலட்சுமி அம்மாள் 4—9—1989 காலமானார்; இவர் ஜோதிடர் ரங்கநாத ஐயர் (நுணாவில்), தாட்சாயணி, அகிலாண்டநாயகி, கிருஷ்ணமூர்த்திஐயர் (சுந்தப்பலை), சிவபாக்கியம், பானுமதி ஆகியோரின் அன்புத் தாயாரும், வரதராஜஐயர் [கண்டி], கந்தசாமிக் குருக்கள் (நாவற்குழி), மனோன்மணி, சாந்தினி, ஹரி [சென்னை - இந்தியா] ஆகியோரின் மாமியாரும், ராஜேந்திரன் [கில்வண்டர்-கண்டி], விஜயலட்சுமி (மகளிர் உயர் பாடசாலை, கண்டி), கலாதேவி [வேம்படி மகளிர் கல்லூரி - யாழ்ப்பாணம்], பகீரதன், விவேகானந்தன் [யாழ்: இந்துக் கல்லூரி], சத்தியா, வரிபல்லவன், சிருஷாந்தன் ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்; அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று [5-9-1989) செவ்வாய்க்கிழமை நடைபெற்றது: உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்;

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி;

தகவல்
மக்கள், மருமக்கள்
]2057]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 203/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 06-09-1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org